பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 20 திங்கட்கிழமை 05.07.2021 கதிர் 242

**இது ரகசியம் அல்ல!**

வெளியில் தெரியாத புதிய பிரச்சினை ஒன்று இலங்கைக்கு எதிராக உருவாகி வருகின்றது. எத்தகைய இராஜதந்திரச் சிக்கலை அது தரப்போகின்றதோ என்பதை இப்போதே ஊகித்துக் கூறமுடியாது. ஆனால் இலங்கை ஆட்சிப் பீடத்துக்கு பக்கம்02

## வடக்கில் சிவிலியன்களைக் கொண்டு உருவாகிறது

# கடல் சாரணர்கள் அணி கடலைக் கண்காணிக்க!

## இந்திய மீனவர் அத்துமீறலை எதிர்கொள்வதும் நோக்கமாம்

கொழும்பு, ஜூலை 05

இலங்கைக்கடலில்-குறிப்பாகவடக்குகடலில்-இடம்பெறக் கூடிய அத்துமீறல்களைக் கண்டுபிடித்து அவற்றை எதிர் கொள்வதற்காக இலங்கைப் படைகளுடன் தொடர்பில்லா மல் தனிப்பட்ட சிவிலியன்களை உள்ளடக்கிய கடல் சார ணர் அணி ஒன்றை உருவாக்குவதற்கான முன் ஆயத்தப் பணிகளில் இலங்கை கடற்றொழில் அமைச்சு ஈடுபட்டிருப் பதாக மிக நம்பகரமாக அறிய வந்தது. 2

## சீனாவில் இருந்து இலங்கைக்கு மேலும் 10 இலட்சம் தடுப்பூசிகள்

சீனாவில் இருந்து மேலும் பத்து இலட்சம் டோஸ் 'சினோ பார்ம்' தடுப்பூசிகள் இலங்கை வந்தடைந்துள்ளன.

சீனாவின் பீஜிங்கில் இருந்து நேற்று அதிகாலை இவை கட்டு நாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தன என்று அரசு தெரி வித்துள்ளது.

இந்தத் தடுப்பூசிகள் இரண் டாவது டோஸாகப் பயன்படுத் தப்படவுள்ளன என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

சீனாவில் இருந்து இலங் கைக் குக் கொள்வனவு செய்யப் பட்ட நான்காம் கட்ட தடுப்பூசி தொகை இதுவாகும்.

இலங்கையில் இதுவரையில் 29 இலட்சத்து 16 ஆயிரத்து 330 பேருக்கு 2

## மேலும் 45 பேர் மரணம் கொரோனா காவு 3,236

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 45 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 25 பெண் களும், 20 ஆண்களும் உள்ள டங் குகின்றனர் என்று அரச தக வல் திணைக்களம் அறிவித் துள்ளது.

30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 3 பெண்களும், 7 ஆண்களும் உயிரிழந்துள்ள னர். 60 வயதுக்கு மேற்பட்ட 22 பெண்களும், 13 ஆண்களும் சாவடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோ னாத் தொற்றுக்குள்ளாகி உயி ரிழந்தவர்களின் மொத்த எண் ணிக்கை 3 ஆயிரத்து 236 ஆக அதிகரித்துள்ளது.

## நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர் ஒன்றியத்தின் தொடர் தொழிற்சங்க நடவடிக்கை

### இன்று ஆரம்பம்; வைத்தியசாலை சேவைகள் பாதிக்கும்

(எஸ்.நிதர்ஷன்)

நிறைவுகாண் மருத்துவவி யல் தொழில் வல்லுநர்கள் ஒன் றியத்தின் தொடர் தொழிற் சங்க நடவடிக்கை இன்று திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் ஆரம் பிக்கப்படுவதனால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உள்ளிட்ட வடக்கின் வைத்திய சாலைகளில் அவசர மருத்துவ சேவை தவிர்ந்த ஏனையவை பாதிக்கப்படவுள்ளன.

இந்தத் தொழிற்சங்க நடவ டிக்கை காரணமாக மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவிய லாளர்கள், மருந்தாளர்கள் மற் றும் கதிரியக்கவியலாளர்கள் நாளாந்த சேவையில் இன்று முதல் ஈடுபடமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் முன்னெ டுக்கப்படும் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையை 2

## கோண்டாவில் வன்முறைக்கு காரணம் ஆவா; 'ஜி' குழுவினரை இலக்கு வைத்தே தாக்குதல்!

### 3 சந்தேகநபர்கள் கைது; 13 பேர் தலைமறைவு 5 வாள்கள், ஓட்டோ, மோட்டார் சைக்கிள் மீட்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., கோண்டாவில் செல்வ புரம் பகுதியில் இடம்பெற்ற வன் முறைக்கு ஆவா குழுவிலிருந்து பிரிந்து 'ஜி' குழுவை உருவாக் கியமையே 2

## இலங்கையில் 1,517 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,517 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இரா ணுவத் தளபதி ஜெனரல் சவேந் திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோ னாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 65 ஆயிரத்து 574 ஆக எகிறியுள் ளது.

கொரோனாவிலிருந்து குண மடைந்தவர்களின் மொத்த எண் ணிக்கை 2 இலட்சத்து 33 ஆயி ரத்து 317 ஆக 2

## இன்று தொடக்கம் ஜூலை 19 வரைக்கும் அமுலாகிறது புதிய சுகாதார வழிகாட்டல்

### நேற்று வெளியிட்டது சுகாதார அமைச்சு

மக்களின் நாளாந்தச் செயற் பாடுகளில் இறுக்கமான கட்டுப் பாடுகளுடன் புதுப்பிக்கப்பட்ட சுகாதார வழிகாட்டல்களை அரசு நேற்று வெளியிட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் விசேட வைத் திய நிபுணர் அசேல குணவர்தன இதனை வெளியிட்டுள்ளார்.

இன்று முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை அமுலாகவுள்ள வகையில் இந்த 2

## ஆண்டவர் மேல் பழியைப் போட்டுவிட்டு தப்பிவிட முடியாது; தமிழினத்துக்காக எந்த விலையையும் கொடுக்க நாம் தயார்

### தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான சந்திப்பையடுத்து செல்வம் தெரிவிப்பு



(இ.கலையமுதன்)

தமிழினத்தை ஆண் டவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று ஆண் டவர் மேல் பழியைப் போட்டுவிட்டு நாங்கள் தப்பிவிட முடியாது. ஒவ் வொரு அங்குலமாக எங் களுடைய நிலங்கள் பறி போய்க் கொண்டிருக்கின் றன. இந்தநிலையில், எங்களுடைய இனத்துக் காக எந்த விலையையும் கொடுக்க நாங்கள் தயா ராக இருக்கின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான செல்வம்அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் 2

காலைக்கதிர் Kalaikkathir
தொடர்ச்சி திங்கட்கிழமை 05.07.2021 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மிக மோசமான நெருக்கடியாக அது எதிர்காலத்தில் மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதுதான் நிலைமை.

இலங்கையின் சீன சார்புப் போக்கு இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு எரிச்சலைத் தந்திருப்பதும், அதனால் மேற்குலகுடனான உறவாடலில் கொழும்பு அரசு சில முட்டுப்பாடுகளைச் சந்தித்து வருகின்றது என்பதும் தெரிந்தவையே.

இதற்கிடையில் –

சீனாவின் இருபது நிறுவனங்களுடன் தொடர்பாடல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதை அமெரிக்கா தடை செய்து அறிவித்திருக்கின்றது. ஜோ பைடன் அரசின் இந்த அறிவிப்பு வெறுமனே அமெரிக்க நாட்டுக்கும், அமெரிக்க நிறுவனங்களுக்கும், அமெரிக்கப் பிரஜைகளுக்கும் மட்டுமானதா அல்லது அதையும் தாண்டி உலகளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்பட்ட ஒரு விவகாரமா என்பது இன்னும் தெளிவாகவில்லை.

அமெரிக்கா தடை அறிவிப்பு விடுத்த இருபது சீன நிறுவனங்களில் மூன்று நிறுவனங்கள் ஏற்கனவே கொழும்பு துறைமுக நகரத்தில் தீவிர செயற்பாட்டில் இருப்பவை என்று தெரிகின்றது. போதாக்குறைக்கு கொழும்புத் துறைமுகத்தின் முனையம் ஒன்றில் பாரம் தூக்கி நிறுவும் பணியில் ஈடுபட்டிருக்கும் சீன நிறுவனம் ஒன்றும் அமெரிக்காவின் தடைப்பட்டியலில் இடம்பெற்றிருப்பதாகத் தெரிகின்றது.

இந்த நிறுவனங்கள் கொழும்புத் துறைமுக நகரத்திலும் வெளியிலும் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுகின்றமையை அமெரிக்கா எப்படிப் பார்க்கும், என்ன நடவடிக்கை எடுக்க இலங்கையைக் கோரும் என்பவை எல்லாம் முற்கூட்டியே எதிர்வு கூறமுடியாத நெருக்கடிகள்.

அமெரிக்காவில் இரட்டைக் கோபுரக் கட்டடங்கள் மீதான தாக்குதலை அடுத்து சர்வதேச ரீதியில் 'பயங்கரவாதிகளுக்கு' எதிரான போரைத் தொடுத்த அமெரிக்கா, இந்த விடயத்தில் உலக நாடுகள் ஒன்றில் எங்கள் பக்கம் நிற்க வேண்டும் இல்லையேல், அவை 'பயங்கரவாதிகள்' பக்கம் நிற்கின்றன என்று அர்த்தம் என அறிவித்தது.

அதுபோன்ற ஓர் அறிவிப்பை இந்த இருபது சீன நிறுவனங்கள் விடயத்தில் அமெரிக்கா விடுத்தால் கொழும்பின் நிலைமை இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையாகும் என்பது புரிந்து கொள்ளத் தக்கதே.

எந்தக் காலத்திலும் பாம்புக்கு வாலையும் மீனுக்குத் தலையையும் காட்டும் தந்திரோபாயம் கொழும்புக்கு வெற்றியளிக்கப் போவதில்லை என்பது ஊகிக்கத் தக்கதே.

சீன உறவு கொழும்புக்குச் சிக்கலைத் தராது விடாது போலை...!

★ ★ ★

தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்து, சிங்கள ஆட்சிப் பீடத்தின் அச்சுறுத்தலை ஒற்றுமைப்பட்டு எதிர்கொள்ளச் செய்வது தொடர்பான ரெலோவின் முயற்சி சிறிது முன்நகரத் தொடங்கியிருக்கின்றது. இன்னும் மிகமிக நீண்ட தூரம் தாண்ட வேண்டியிருக்கின்றது.

நேற்றைய இந்தக் கூட்டத்தில் சுரேஷ் பிறேமச்சந்திரன் இணைந்து கொண்டுள்ளமை – அங்கு வெளிப்படையாக அவர் பேசியமை – எல்லாம் வரவேற்கக் கூடியவை. அவரது அனுபவ முதிர்வின் வெளிப்பாடு அவை.

இந்தப் பூர்வாங்கக் கலந்துரையாடலில் தான் பங்குபற்றுவார் அல்லது தனது பிரதிநிதியாக சிவநாதன் பங்குபற்றுவார் என மின் அஞ்சலிலும் நேரடித் தொலைபேசியிலும் உறுதியளித்திருந்தார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

ஆனால், நேற்று மாலை கூட்டத்துக்கு அவரும் வரவில்லை. அவரது கட்சிப் பிரதிநிதியும் வரவில்லை. வருவதாகத் தெரிவிக்கப்பட்ட பிரதிநிதியின் தொலைபேசியும் நேற்றுக் காலையில் இருந்து சத்தம் சந்தடியின்றி செயலிழந்து விட்டது.

இப்படி முன்னுக்குப் பின்னான முரண்பாட்டுச் செயற்பாடு – முரணிலை நடவடிக்கை – விக்கியினுடையது போன்ற கட்சிக்கு அழகேயல்ல. அவர் தன்னையும் கட்சியையும் திருத்திக் கொள்வது நல்லது.

– மின்னல் –

## நிறைவுகாண் மருத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, பருத் தித்துறை ஆதார வைத்தியசாலை உள்ளிட்ட வைத்தியசாலைகளில் பணியாற்றும் நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களும் ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளனர்.

இதனால் நீண்ட தூரத்திலிருந்து ஆய்வுகூடப் பரிசோதனை உள்ளிட்டவைகளுக்கு வைத்தியசாலைகளுக்கு செல்வோர் தேவையற்ற அலைச்சலைத் தவிர்ப்பது பொருத்தமாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், உயிர்காக்கும் அவசர சேவைகளுக்கு நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் சேவையாற்றுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## இலங்கையில் 1,517...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல்மையங்கள்என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 29 ஆயிரத்து 21 ஆக அதிகரித்துள்ளது.

---

## ஆண்டவர் மேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சித்தலைவர்களுக்கிடையிலான சந்திப்பு நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் ரெலோவின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது இனத்தை அழிக்க நினைக்கின்ற அரசுக்கு எதிராக ஒரு பலமான சக்தியாக அமைய வேண்டும் என்ற நோக்கத்திலேயே தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தோம். இரண்டாவது முறையில் நாங்கள் விடுபட்ட தரப்புகளுக்கும் அழைப்பிதழ் கொடுத்திருந்தோம்.

யாழ்ப்பாணத்தில் எங்களுடைய காரியாலயத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. அதில் சுரேஷ் பிரேமச்சந்திரன் கலந்து கொண்டார். நாங்கள் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். அதைவிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா, தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொண்டார்கள். ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர் கலந்துகொள்ளவில்லை.

நாங்கள் இதன் பிரகாரம் இந்த வாரம் நாடாளுமன்றம் கூடிய பின்னர் அடுத்த கட்டமாக மீண்டும் ஒரு கூட்டான பலமான அமைப்பாகச் செயற்படுவதற்கு ஒரு முடிவை எடுத்து இருக்கின்றோம். அதன் பிரகாரம் அடுத்து வரும் நாள்களிலே நாங்கள் அழைக்க விரும்பிய தலைவர்களோடு பேசி இறுதியாக ஒரே குடையின் கீழ் ஒரே கூட்டாக செயற்படுவதற்கான ஒரு முடிவை எடுக்க இருக்கின்றோம்.

உண்மையிலேயே எல்லோரையும் அரவணைத்துப் போக வேண்டும் என்பது தான் எங்களுடைய பிரதான நோக்கம். அந்தவகையிலே நாங்கள் மீண்டும் அந்தக் கட்சிகளின் தலைவர்களிடம் இது சம்பந்தமாக கலந்தாலோசித்து நேரில் சென்று அவர்களுடன் பேசி அவர்களை இந்தப் பலமான ஒற்றுமைக்குள் கொண்டு வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவோம். – என்றார்.

---

## இன்று தொடக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுகாதார வழி காட்டியை அவர் வெளியிட்டுள் ளார்.

அதன்படி பொதுப்போக்கு வரத்து சேவைகளில் பயணிக்க, ஆசன கொள்ளவில் 50 சத வீதமானோருக்கு மாத்திரமே பயணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், மேல் மாகாணத்தில் இந்த எண்ணிக்கை 30 சதவீதமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், தனியார் மற்றும் வாடகை வாகனங்களில் ஆசன எண்ணிக்கைக்கு மாத்திரமே பயணிகள் பயணிக்க முடியும்.

ஆடைத்தொழிற்சாலைகள் உட்பட ஏனைய தொழிற்சாலைகள் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான ஊழியர்களைக் கொண்டு இயங்க வேண்டும்.

சேவை அவசியத்துக்கு ஏற்ப, கடமைக்கு அழைக்கப்படக்கூடிய ஊழியர்களின் எண்ணிக்கையை நிறுவன பிரதானி தீர்மானிக்கலாம்.

அத்துடன் வீட்டிலிருந்து பணியாற்றக்கூடியவர்கள், அதனை நடைமுறைப்படுத்துவது சிறந்ததாகும்.

திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி இல்லை. எனினும், மணமகன் மற்றும் மணமகள் உட்பட ஆகக்கூடியது 10 பேரை மாத்திரம் கொண்டு பதிவு திருமணத்தை நடத்தலாம்.

கொரோனா அல்லாத காரணத்தால் மரணிப்போரின் இறுதிக்கிரியைகள், பூதவுடல் கையளிக்கப்பட்டு 24 மணித்தியாலத்துக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். இறுதி நிகழ்வுகளில் பங்கேற்க 15 பேருக்கு மாத்திரமே அனுமதி உண்டு.

வங்கி, நிதி நிறுவனங்கள் மற்றும் அடகுப்பிடிப்பு நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரே தடவையில் மொத்தமாக 10 வாடிக்கையாளர்கள் மாத்திரமே சேவைகளை பெற்றுக்கொள்ளமுடியும்.

வீட்டில் இடம்பெறும் விருந்துபசார நிகழ்வுகள் மற்றும் சமய நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

அத்துடன், மத வழிபாட்டுத் தலங்கள் அனைத்தும் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும்.

சமூக களியாட்ட விடுதிகளுடனான மது பானசாலைகள், இரவு நேர களியாட்ட விடுதிகள், சூதாட்ட மற்றும் பந்தய நிலையங்கள் என்பன தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும்.

எனினும், உடற்பிடிப்பு நிலையங்களைத் (ஸ்பா) திறப்பதற்கு அனுமதியுண்டு.

சிறப்பங்காடிகள் மற்றும் ஆடை விற்பனை நிலையங்களில், அவற்றின் மொத்த இடப்பரப்பில் 25 சதவீதமான அளவு வாடிக்கையாளர்களை மாத்திரம் ஒரே தடவையில் அனுமதிக்க முடியும்.

விற்பனை நிலையங்களை சுகாதாதர வழிமுறைகளுக்கமைய திறக்க முடியும். ஒரே தடவையில் 3 வாடிக்கையாளர்களுக்கு மாத்திரமே உள்நுழைய முடியும்.

சிகையலங்கார நிலையங்களில் சுகாதார வழிகாட்டல்களின் கீழ் பணிகளை முன்னெடுக்க முடியும். சிறைச்சாலை, முதியோர் மற்றும் சிறுவர் விடுதிகளுக்கு செல்லப் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

திரையரங்குகள் மற்றும் நூதனசாலைகள் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும்.

---

## கோண்டாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

செல்வபுரம் பகுதிக்குள் புகுந்து 9 பேரை வாளினால் வெட்டி படுகாயப்படுத்தியமை மற்றும் ஸ்டியோ ஒன்றுக்குத் தீவைத்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் 3 பிரதான சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 13 சந்தேகநபர்கள் தேடப்பட்டு வருவதுடன், அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து பாதுகாத்து வருபவர்களையும் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகப் பொலிஸார் கூறினர்.

கோண்டாவில் செல்வபுரம் பகுதியில் கடந்த ஜூன் 30ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற வன்முறையில் ஒருவரின் கை துண்டாடப்பட்டதுடன் மேலும் 8 பேர் படுகாயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த லியனகேயின் தலைமையில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதற்கமைய சம்பவத்துடன் தொடர்புடைய 3 பிரதான சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்

யாழ்ப்பாணம் பொம்மைவெளியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரும், கோண்டாவிலைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரும், கொக்குவில் வராகி அம்மன் ஆலயத்தைச் சேர்ந்த 19 வயதுடைய ஒருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

மூவரிடமும் முன்னெடுத்த விசாரணையில் சம்பவ தினத்தன்று 6 மோட்டார் சைக்கிள்களில் 16 பேர் இணைந்து இந்த வன்முறையில் ஈடுபட்டனர் என்று வாக்கு மூலம் வழங்கியுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரிடமிருந்து 3 கஜேந்திர வாள்களும், 2 சாதாரண வாள்களும், ஓட்டோ ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

---

## கடல் சாரணர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடலில் இடம்பெறக் கூடிய கடத்தல்கள், போதை வஸ்துப் பொருள்களின் கைமாறல்கள், மீனவர்கள் அத்துமீறல்கள், தமிழக – இலங்கை மீனவர்களின் கூட்டுச் செயற்பாடுகள் போன்றவற்றை நேரடியாகக் கண்காணிக்கும் சிவில் அமைப்பாக இந்தக் கடல் சாரணர் அணியை உருவாக்குவதற்குத் திட்டமிடப்படுவதாகத் தெரிகின்றது.

இலங்கைக் கடலுக்குள் அத்துமீறிய இந்திய மீனவர்களின் சுமார் இரு நூறு ட்ரோலர்கள், படகுகள் இலங்கைக் கடற்படையால் கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

2018 இற்குப் பின்னர் தடுத்து வைக்கப்பட்ட சுமார் எழுபதுக்கும் அதிகமான தமிழக மீனவர்களின் படகுகள் இலங்கை அரசின் அறிவுறுத்தல்படி அரசுடமையாக்கப்பட்டுள்ளன. அதற்கு முந்தித் தடுக்கப்பட்ட சுமார் 130 படகுகளில் நல்ல நிலையில் உள்ள படகுகள் இந்தியத் தரப்பினால் கடல் வழியாக மீளக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. எஞ்சியவை பலவும் நீண்ட காலப் பயன்பாடின்றி சிதிலமடைந்து போயிருக்கின்றன.

இவ்வாறு சிதிலமடைந்த படகுகளையும் அரசுடமையாக்கப்பட்ட படகுகளையும் ஒன்று சேர்த்து, மேற்படி புதிய சாரணர் அணிக்குத் தேவையான கடற்கலங்கள் உருவாக்கப்படவிருக்கின்றன என கடற்றொழில் அமைச்சின் முக்கிய வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டது.

கடல் சாரணர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவோருக்கு உரிய பயிற்சி, ஊதியம் என்பன வழங்கப்படும்.

சிவிலியன் துணைப் படையணி போல இது செயற்படும். வடக்கில் கடற்றொழில் விடயங்களிலும் கடல் பயணங்களிலும் அனுபவமும் பாரம்பரிய பின்னணியும் கொண்டவர்களுக்கு இந்தக் கடல் சாரணர் அணியில் இடமளிக்கப்படும் எனவும் அந்த வட்டாரம் உறுதியாகத் தெரிவித்தது.

கடல் சாரணர் அணியில் ஈடுபடுவோருக்கு எத்தகைய பயிற்சிகள் வழங்கப்படும், எத்தகைய ஆயுதங்கள் வழங்கப்படும், முதல் கட்டத்தில் எத்தனை பேர் பணியில் சேர்க்கப்படுவார்கள் என்ற விவரங்களை அந்த வட்டாரம் தெரிவிக்கவில்லை.

எனினும், அந்தக் கடல் சாரணர்கள் கடல் கண்காணிப்பின் போது தீய சக்திகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் நிச்சயம் செய்யப்பட்டிருக்கும் என்றது அந்த வட்டாரம்.

எனினும், கடல் சாரணர்கள் கடற்படையினருடன் இணைந்து செயற்படுவரா என்ற கேள்விக்கு அந்த வட்டாரம் பதில் ஏதும் கூறவில்லை.

---

## சீனாவில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முதல் டோஸ் தடுப்பூசியும் 12 இலட்சத்து 6 ஆயிரத்து 499 பேருக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசியும் ஏற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆளில்லா இடத்தில் இரு கி.மீ. வீதி 16 கோடி ரூபா செலவில் அமைப்பு!

## மக்களின் வரி பணம் வீணடிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு





**ந.லோகதயாளன்.**

யாழ்ப்பாணம்,ஜுலை05

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களே இல்லாத பகுதியில் அமைக்கப்படும் 2 கிலோ மீற்றர் வீதிக்கு 16 கோடி ரூபா மக்களின் வரிப் பணம் வீணடிக்கப்படுவதாக பகிரங்கமாகவே குற்றம் சாட்டப்படுகின்றது.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் தம்பிராய் – கறுக்காய்தீவு வீதியில் செல்லையாதீவு பாடசாலையை தாண்டிச் செல்லும் சமயம் வலது புறமாக திரும்பும் பாதையே புனரமைக்கப்படுகின்றது. செல்லையாதீவு அம்மன் கோவிலடி வரை 2.250 கிலோ மீற்றர் நீள வீதி தற்போது 16 கோடி ரூபா செலவில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைக்கப்படு வதாகத் தெரிகின்றது.

இருந்தபோதிலும் கொல்லகுறிச்சி, செட்டியார் குறிச்சியில் ஏற்கனவே உள்ள அம்மன் கோவிலிற்குச் செல்லும் ஒரு பாதை 2 கிலோ மீற்றர் வீதி பழுதடைந்த நிலைமையில் உள்ளது. இந்த வீதியில் 75 இற்கும் மேற்பட்ட மக்கள் வாழுகின்றமையோடு 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் நாளாந்த பாவனை வீதியாகவும் அது உள்ளது. அது புனரமைக்கப்படவில்லை.

மாறாக, முன்னர் குறிப்பிடப்பட்ட வீதி கொல்லகுறிச்சி கமக்கார அமைப்பு, அம்மன் ஆலயம் ஆகியன விடுத்த கோரிக்கையின் பெயரில் அமைக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. 2021ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் கூறப்படும் வரையில் பிரதேச செயலகத்திற்கு இந்த வீதி அமைப்பு தொடர்பில் எதுவுமே தெரியாது எனவும் கூறப்படுகின்றது.

இந்த வீதி கிறவல் வீதியா அல்லது தார் வீதியா என்பன போன்ற விவரங்களோ அல்லது இதற்கான முன்மொழிவுகள் பற்றிய விவரம் எதுவுமே எமக்குத் தெரியாது என பிரதேச செயலகம் கையை விரிக்கின்றது.

இந்த வீதியின் உரித்தாளரான பூநகரி பிரதேச சபையிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது –

இந்த வீதியினை புனரமைப்புச் செய்ய நாம் கோரிக்கை விடவில்லை, இந்த வீதியை செப்பனிட அனுமதியோ அல்லது இந்த வீதியை புனரமைப்பிற்காக கையளிக்குமாறும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கோரிக்கையோ வழங்கப்படவும் இல்லை. இத்தனைக்கும் அப்பால் அங்கே வந்து கிறவல் பறித்து பணிகளை ஆரம்பிக்கும் வரையிலும் அது எமக்குத் தெரியப்படுத்தப்படவுமில்லை. இருந்தபோதும் எமது பகுதியில் வரும் அபிவிருத்திப் பணி ஒன்றிற்கு நாம் தடையாக இருக்கக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காகவே பொறுமை காக்கின்றோம் என்கின்றனர்.

இவை தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் இளங்கீரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

இந்த வீதிக்கான நீளம், பெறுமதியை உறுதி செய்த போதிலும் வீதி தேர்வு , சிபார்சு தொடர்பில் எமக்கு ஏதும் தெரியாது, உள்ளூர் அமைப்புக்களின் கோரிக்கையின் பெயரிலேயே தலைமைப் பணிமனையினால் இது தேர்வு செய்யப்பட்டது. – என்கின்றார்.

இவை அனைத்து விடயம் சார்பிலும் மாவட்ட அரச அதிபரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளருமான திருமதி.ரூபவதி கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, நாம் வினாவும் வரையில் மாவட்ட அரச அதிபர் கூட இது தொடர்பில் முழுமையாக அறிந்திருக்கவில்லை என்பது தெரியவந்தது.

அதேநேரம் இது 'ஐ றோட்'டாக இருக்க வாய்ப்பில்லை, ஏனெனில் 'ஐ றோட்' திட்டம் மக்களின் கருத்தறியாது இடம்பெறாது, ஆனால் மக்களே இல்லாத வீதிக்கு 16 கோடி ரூபா என்பதனை அறிந்திருக்கவில்லை, அதனால் உடனடியாக வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்பு கொண்டு இவ்விடயம் தொடர்பில் ஆராயப்படும் என்றார் அவர்.

நாட்டில் இடம்பெறும் ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தியின் கீழ் இது இடம்பெறுகின்றது. இப் பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பணியாற்றும் ஓர் பொறியியலாளருக்கு இப் பிரதேசத்தில் 10 ஏக்கர் நிலம் இருப்பது மட்டுமே இவ்வீதி தேர்வு செய்யப்பட்டதற்கு அடிப்படைக் காரணம் எனச் சந்தேகிக்கப்படுவதோடு, திட்டம் ஆரம்பித்து பணிகள் இடம்பெறுகின்றபோதும் அந்த இடத்தில் ஓர் விளம்பரப் பலகைகூட இல்லாதமை மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மாவட்டத்திலேயே இந்த ஒரு வீதிதான் ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி திட்டத்தில் போடப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது.

இவை அனைத்திற்கும் மேலாக 16 கோடி ரூபாவில் அமைக்கப்படும் வீதியில் அதிக சதுப்பு நிலப் பிரதேசம் உள்ளது. அந்த சதுப்புக் களி கூட அகற்றப்படாமலேயே கல் அடுக்கப்படுவதனால் கனரக வாகனம் சென்றால் நிச்சயமாக வீதி கீழ் இறங்கும் நிலைமையே ஏற்படும் என கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவைச் சேர்ந்த ஜீவநாயகம் குற்றம் சாட்டுகின்றார்.

இவை அனைத்தும் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாண பிரதம நிறைவேற்று அதிகாரி குறூஸைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

கண்ணகை அம்மன் வீதியானது ஆலயத்தின் பெயரிலும் விவசாயிகளின் நன்மை கருதியும் பரிந்துரைக்கப்பட்டதாகும். இருப்பினும் அதிக மக்கள் வாழும் வீதி தவற விடப்படுகின்றதனால் தற்போதும் ஒரு லட்சம் வீதி திட்டத்தில் மேலும் வீதிகள் உள்ளமையினால் அந்த வீதியினையும் இணைப்பதற்கு முன்னுரிமை அளிக்க முடியும். இந்த ஒரு லட்சம் வீதியில் நாடு முழுவதும் விவசாயிகளிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது. – எனப் பதிலளித்தார்.

## சைக்கிளில் சென்றவரை மோதித் தள்ளியது லொறி

### சாரதி தப்பியோட்டம்



அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை பகுதியில் சைக்கிளில் சென்ற ஒருவர் லொறியொன்று மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து அட்டாளைச்சேனை பகுதியில் உள்ள பிரதான வீதியில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

வீதி திருத்த வேலைகளுக்கு அமர்த்தப்பட்டிருந்த மண் லொறி பிரதான வீதியால் சென்று கொண்டிருந்த நிலையில் முன்னால் சைக்கிளில் சென்ற நபரை மோதித் தப்பிச் சென்றுள்ளது.

குறித்த விபத்தில் படுகாயமடைந்த சைக்கிளில் பயணம் செய்தவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தின் சி.சி.டி.வி. காட்சியும் தற்போது பெறப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தப்பிச் சென்ற சாரதியைக் கைது செய்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் மேலும் சில பிரதேசங்கள் முடக்கம்

மட்டக்களப்பு மற்றும் களுத்துறை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலும் சில பிரதேசங்கள், காலை 6 மணியுடன் முடக்கப்பட்டுள்ளன.

களுத்துறை மாவட்டத்தில், களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹவஸ்கடுவ தெற்கு முடக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவில், பெரியக்கல்லாறு – 2, பெரியக்கல்லாறு – 3 மற்றும் பெரியக்கல்லாறு – 3 தெற்கு ஆகிய பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரமத்த தெற்கும் முடக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு துறைமுக நகர் வளாகத்தை மக்களுக்குப் பார்வையிடச் சந்தர்ப்பம்



கொழும்பு துறைமுக நகர வளாகம் நாட்டு மக்களுக்காக அடுத்த மாதம் திறக்கப்படும் என்று துறைமுக நகர் பொருளாதார ஆணைக் குழு உறுப்பினர் கலாநிதி பிரியத் பந்து விக்ரம தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக, கொழும்பு துறைமுக நகர வளாக பூங்கா மற்றும் கரையோரப் பகுதி மக்களுக்காக திறக்கப்படும்.

இதேவேளை துறைமுக நகர் திட்டத்தில் முதலீடு செய்வதற்கு பல முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் எனவும் துறைமுக நகர் பொருளாதார ஆணைக் குழு உறுப்பினர் கலாநிதி பிரியத் பந்து விக்ரம கூறினார்.

## கட்டுப்பாடு தளர்வு குறித்து இதுவரை தீர்மானம் இல்லை

### ஹேமந்த ஹேரத் சுட்டிக்காட்டு

தற்போது அமுலிலுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து இதுவரை எவ்விதத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர் –



நாட்டில் தற்போது டெல்டா தொற்றின் அச்சுறுத்தல் தொடர்ந்தும் காணப்படுவதாகவும் கூறினார்.

இதுவரை 5 பேருக்கு டெல்டா தொற்று ஏற்பட்டுள்ளதாகவும், குறித்த தொற்று மேலும் பரவலடைவதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பாக இதுவரை எந்தவித இறுதித் தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இம்முறை பாவத்தின் விளைச்சல்

எரிபொருள் விலை உயர்வால் ஏற்பட்ட நெருக்கடி ஒருபுறம் என்றால் விவசாயத்துக்கான இரசாயன உரங்கள், களை கொல்லிகள், கிருமி நாசினிகள் போன்றவற்றுக்கான தடையால் ஏற்பட்டு வரும் சிக்கல் மறுபுறத்தில் தீவிரமாகி வருகின்றது.

பெரும்போகம் வாசலைத் தட்டியுள்ள சமயத்தில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள விவசாயிகள் தத்தமது பிரதேச உள்ளூர் அரசியல்வாதிகளை மொய்க்கின்றார்கள்.

இதனால், விவசாயப் பிரதேசங்களைச் சேர்ந்த ஆளும் கட்சி அரசியல்வாதிகள் தாங்கள் தத்தமது பிரதேசங்களுக்குப் போக முடியாமலும், அங்குள்ள உள்ளூர் விவசாயிகளின் நெருக்குவாரங்களுக்கு முகம் கொடுக்க முடியாமலும் இக்கட்டில் சிக்கியிருக்கின் றனர் என்று முறைப்பாடு செய்கின்றார்கள்.

கடந்த வியாழக்கிழமை விவசாயிகள் சம்மேளனங்களின் பிரதிநிதிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்தார். அங்கு கூறப்பட்ட விடயங்கள் பெரும்பாலும் நகைப்புக்கிடமானவையாக இருந்தன என்பதுதான் முக்கிய அம்சம்.

நாற்பது வருடங்களுக்கு மேலாக அசேதன அல்லது இரசாயன உரங்கள், களை கொல்லிகள், கிருமி நாசினிகளைப் பயன்படுத்தி விளைச்சலை மேம்படுத்தி, உச்சப் பயனைப் பெறும் நிலைமையை நமது விவசாயிகளுக்குப் போதித்து, அறிமுகப்படுத்தி, ஊக்கப்படுத்தி, அந்த வழியில் செல்ல வழிப்படுத்தி, உதவி வந்தது அரசாங்கத்தின் விவசாய அமைச்சுத்தான்.

இது ஏதோ விவசாயிகள் தாமாகச் சென்று தேடிக் கொண்ட வினையல்ல.

அந்த முறைமை தவறு என்றால், ஒரே நாளில் அதற்கான மாற்றை நடைமுறைப்படுத்த முடியாது, 'எடுத்தேன். கவிழ்த்தேன்' என்று தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்தவும் முடியாது.

ஜனாதிபதியும் அதிகாரிகளும் தமது குளிரூட்டப்பட்ட அறைகளுக்குள் இருந்து தீர்மானத்தை எடுக்க முடியும். ஆனால் களத்தில் நிலைமை யாது என்பதை அவர்கள் கண்டறிய வேண்டும்.

அசேதன – இரசாயன – உரங்களை ஒரேயடியாகத் தடை செய்வதாயின், அவற்றுக்கு மாற்றாக சேதன உரங்களைத் தயார் செய்து நம் கைவசம் வைத்திருக்க வேண்டும்.

அதை விடுத்து, அசேதன – இரசாயன – உரங்களை ஒரே நாளில் தடை செய்கிறேன் என்று அறிவித்து, வீம்புத்தனம் பண்ணுவது – அதிகார அட்டூழியமன்றி, நியாயமான ஆட்சி முறைமை அல்ல.

நோயால் துடிப்பவனுக்கு நோய்க்கான மருந்தை வாயில் செலுத்த வேண்டுமே தவிர, மருந்துக்குரிய பணத்தை வாய்க்குள் செலுத்தக்கூடாது. அது பயனற்ற முயற்சி.

ஆனால் ஜனாதிபதியின் முயற்சியும் பதிலும் அப்படித்தான் இருக்கின்றன.

*"விவசாயத்துக்கான இரசாயனப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு வருடம் தோறும் எட்டாயிரம் கோடி ரூபாவை நாடு செலவழிக்கின்றது. இப்போது அதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் அந்தப் பணத்தை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்க முடியும்"* – என்று திருவாய் மலர்ந்திருக்கின்றார் ஜனாதிபதி.

நல்ல வேடிக்கையான பேச்சு இது. எட்டாயிரம் கோடி ரூபா இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு இதுவரை கிடைத்து வந்த பயனின் பெறுமதி இந்த எட்டாயிரம் கோடி ரூபாவைப் போல பல மடங்கு. அந்த வருமானத்துக்கு வேட்டு வைத்து விட்டு, அதற்குப் பதிலாக இந்தப் பணத்தைப் பங்கிட்டு அவர்களுக்கு வழங்கலாம் என்று கூறுவது அபத்தப்பேச்சு.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்திலும் கூட பல அமைச்சர்கள் தத்தமது பிரதேசங்களிலும் நாட்டிலும் உரத் தட்டுப்பாடு உச்சத்தைத் தொட்டிருப்பதாகவும், விவசாயிகள் பெரும்போகச் செய்கையை முன்னெடுக்க முடியாத அளவு நெருக்கடியில் மூழ்கியுள்ளனர் என்றும் தெரிவித்தபோது விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத் கமகே கதையைத் திசை திருப்பியிருக்கின்றார்.

பெரும் போகச் செய்கைக்குத் தேவையான உரம் வழங்கப் பட்டுள்ளது என்றும், சில இடைத்தரகர்கள் உரத்துக்கு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, குறுகிய வழியில் லாப மீட்ட முயல்கின்றனர் என்றும் கூறி சமாளிக்க முற்பட்டிருக்கின்றார் அவர்.

அவர் எந்த ரக உரத்தைப் பற்றிக் கூறுகின்றார் என்று தெரியாமல் விழியைப் பிதுக்குகின்றார்கள் விவசாயிகள்.

இரசாயன உரங்களின் இறக்குமதிக்கு முழுத் தடை என்றால் அவை எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்க முடியும்? செயற்கை உரம் அல்லது சேதன உரம் தேவைக்கு ஏற்ற அளவு பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது என்று அவர் கப்ஸாவா விடுகின்றார் என்ற கேள்வியும் எழுகின்றது.

எது, எப்படியோ இந்த ஆட்சியாளர்களை ஆட்சிப் பீடத்துக்குக் கொண்டு வந்த பாவத்துக்கான சம்பளத்தை இந்த நாட்டின் விவசாயிகள் இந்தப் பெரும்போக காலத்திலேயே அறுவடை செய்யப் போகின்றார்கள் என்பது மட்டும் உறுதி.

# சந்திரிகா, குமார வெல்கம ஆகியோரை மீண்டும் கட்சியில் இணையுமாறு அழைப்பு

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விடுத்தது



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஆகியோரை கட்சிக்கு திரும்புமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கட்சியில் இருந்த கட்சி ஆர்வலர்களை மீண்டும் கொண்டுவருவதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் வலுப்படுத்த முடியும் என்ற பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தித் தொடர்பாளர், கட்சியில் தீவிரமாகச் செயற்பட்டு வந்தவர்களை மீண்டும் கட்சிக்கு அழைத்து வரத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன எனக் கூறியுள்ளார்.

இதனிடையே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் மஹிந்த அமரவீர, அத்தகையவர்களுக்கு கட்சி திறந்திருக்கும் என்று குறிப்பிட்டார். கட்சியில் இருந்த அனைவரும் மீண்டும் கட்சியில் இணைந்து கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உழுந்து பயிர்ச் செய்கையை தாக்கும் ஒருவகை நோய்



மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள உழுந்து பயிர்ச் செய்கைக்கு ஏற்பட்டுள்ள ஒரு வகை நோய்த் தொற்று காரணமாகக் குறித்த செய்கையை முழுமையாக அழிக்கும் நிலைக்குத் தோட்டச் செய்கையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாலையடி புதுக்குளம், பாலப்பெருமாள் கட்டு, குருவில் ஆகிய கிராமங்களில் மேட்டு நில பயிர்ச் செய்கையான தோட்டச் செய்கை அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த வருடம் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் உழுந்து மற்றும் கச்சான் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த வருடம் உரம், மற்றும் கிருமி நாசினி போன்றவற்றிற்கு ஏற்பட்ட தட்டுப்பாடுகள் காரணமாக உழுந்து பயிர்ச் செய்கையைத் தாக்கிய ஒரு வகை நோயைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அப்பகுதி விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இந்த நிலையில் தற்போது குறித்த உழுந்து பயிர் செய்கையை முழுமையாக அழிக்கும் நடவடிக்கையில் தோட்டச் செய்கையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

உரம், மற்றும் கிருமிநாசினி போன்றவற்றுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடுகள் காரணமாக தமது பயிர்களுக்கு அதனை உரிய நேரத்தில் பயன்படுத்தாத காரணத்தாலேயே குறித்த நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதாகத் தோட்டச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# வெளிநாட்டு மணமகனுக்கு திருமணம் மடக்கிப் பிடித்த சுகாதாரத் துறையினர்

## புத்தளத்தில் சம்பவம்

புத்தளத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி நடத்தப்பட்ட திருமணம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

முல்லிபுரம், வெட்டால பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை திருமணம் நடந்துள்ளது. இந்நிலையில் புதுமண தம்பதி உட்பட திருமணத்தில் கலந்து கொண்ட அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பவம்தொடர்பில்தகவல்கிடைத்தவுடன், புதுமண தம்பதி உட்பட கலந்து கொண்ட அனைவரையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்தோம் என புத்தளம் சுகாதார பரிசோதகர் என்.சுரேஷ் தெரிவித்துள்ளார்.

மணமகன் வெளிநாட்டில் இருந்து கடந்த 18 நாள்களுக்கு முன்னர் இலங்கை வந்தவராவர். அவர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடு திரும்பிய நிலையில் திருமணத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

குறித்த திருமண நிகழ்வில் 200 இற்கும் அதிகமாக நபர்கள் கலந்துகொண்டிருந்தனர் என சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

சுகாதாரப் பரிசோதகர்கள் திருமண நிகழ்விற்கு வருகின்றனர் எனத் தகவல் கிடைத்தவுடன் பலர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இந்த திருமண நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்காக அருகில் உள்ள வீடு ஒன்றிலேயே உணவு தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

# நுரைச்சோலையில் நபர் கடத்தல் சம்பவம்; இராணுவ கப்டன் உள்ளிட்ட நால்வர் கைது

நுரைச்சோலை பகுதியில் நபர் ஒருவர் கடத்தப்பட்டு, தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நான்கு இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ உடையை ஒத்த சீருடை அணிந்த நபர்கள் குறித்த பகுதியில் வசிக்கும் நபர் ஒருவரை கடத்திச் சென்று தாக்குதல் மேற்கொண்டு ஜூன் 30 அன்று இளந்தடி கடற்கரை பக்கத்தில் விட்டுவிட்டனர் என நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டிருந்தது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 38 வயதுடைய நபர் காயங்களுடன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் இராணுவத்துக்கு தகவல் வழங்கிய நிலையில், இராணுவம் விசாரணை நடத்தி சந்தேக நபர்கள் நால்வரையும் நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதன் பின்னரே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், அவர்களை புத்தளம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சேருநுவரவில் அமைந்துள்ள இராணுவ முகாமில் பணியாற்றும் கப்டன் உட்பட நான்கு வீரர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் ஆவர்.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் 4

ந.வித்தியாதரன்

1960 களின் நடுப்பகுதியின் ‘தினபதி’, ‘சிந்தாமணி’ பத்திரிகைகள் தொடங்கிய காலத்தில் ஒவ்வொரு எழுத்தாக அச்சுக் கோர்த்து, பக்கம் கட்டி, அச்சிடும் முறைமையே இங்கு இருந்தது. ஓவ் செட் அச்சு முறைமையே வரவில்லை.

அதிலிருந்து சற்று மாறுபாடான ‘லைனோ’ முறையில் எழுத்துக்களை வரிவரியாக அச்சுக் கோர்க்கும் முறைமையை ‘தினபதி’ நிறுவனம்தான் முதன் முதலில் அறிமுகப்படுத்தியது. அதற்கு முன்னர் அது பற்றிய விடயங்களை ஜேர்மனிக்கு நேரில் சென்று அறிந்து வந்தார் எஸ்.டி. சிவநாயகம் ஐயா. அதன் பின்னர் ‘தினபதி’, ‘சன்’, ‘தவஸ’ பத்திரிகைகள் அந்த அச்சு முறைமைக்கு மாறின.

அந்த நேரத்தில் இலங்கையில் வெளியான பத்திரிகைகளில் அழகாகவும், எடுப்பாகவும், நேர்த்தியாகவும் வெளிவந்த பத்திரிகையாக தினபதி மிளிர்ந்தது. இந்த நேரத்தில், அச்சுமுறைமை ஊடாக பத்திரிகை வடிவத்துக்கான ஒரு பண்பியல்புத் தன்மையை உருவாக்கினார் சிவநாயகம்.

தலைப்புகளைப் போடுவதற்கான முறைமை, இலகு தமிழில் செய்திகளை எழுதும் பாணி, செய்தி ஓட்டத்தின் தன்மை பற்றி எல்லாம் ஓர் ஒழுங்கு முறைமையை அவர் ஏற்படுத்துவதற்கு இந்தப் புதிய அச்சு முறைமை வழி செய்தது.

‘ஓவ் செட்’ அச்சு முறைமைக்குள் பத்திரிகைகள் நுழைவதற்கு முந்திய காலத்தில் பெரும் வரப்பிரசாதமாக இந்த லைனோ முறைமை அமைந்தது.

தட்டச்சு செய்வது போல செய்திகளை அடிக்க, இயந்திரத்தில் உள்ள எழுத்து அச்சுகள் வரிகளாகத் தம்பாட்டில் சேரும். பின்னர் ஒவ்வொரு வரிக்குரிய அச்சுக்களில் ஈயம் வார்த்து வரிசையாக அவை வரும். அவற்றுக்குரிய அச்சு எழுத்துக்கள் மீண்டும் தம்பாட்டில் அவையவற்றுக்குரிய பெட்டிகளுக்குச் சென்று சேரும்.


ஒரு செய்தியைத் தட்டச்சு செய்பவர் ஒரு வரி பூர்த்தியானதும், ஒரு பட்டனை அமுக்கியதும் அந்த வரிக்குரிய அச்செழுத்துகள் ஒழுங்கு சேர்ந்து நகர, அதில் உருகும் ஈயம் வார்க்கப்படும். அப்படித் தயாராகும் செய்தியின் அச்சிட்ட வரிகள் வரிசை வரிசையாக வெளியே வரும். அவற்றை ஒழுங்காக அடுக்கிப் பக்கத்தைக் கட்ட வேண்டியதுதான்.

மினக்கெட்டு ஒவ்வொரு எழுத்தாகக் கோர்த்துப் பக்கம் கட்டுவதற்குப் பதிலாக, ஒவ்வொரு வரிகளாகக் கோர்த்துப் பக்கம் கட்டும் இந்த முறைமை பத்திரிகைத் தயாரிப்பில் நேரத்தை மிச்சப்படுத்தி, வேகத்தை அதிகரித்தது.

இந்த முறைமையை இலங்கையில் தமிழ்ப் பத்திரிகை உலகிற்கு முதன் முதலில் அறிமுகப்படுத்துவதற்கு வழி செய்தவர் எஸ்.டி. சிவநாயகம் ஐயா.

சரி, இனி நேற்று என் தொடரின் விட்ட இடத்திற்கு வருவோம்.

அது, இப்போது போன்ற கணினி யுகக் காலம்



அல்ல. கையால் எழுதப்பட்ட செய்திப் பிரதிகள் அச்சில் பத்திரிகைகளில் வெளிவந்தன.

எல்லாச் செய்திகளுக்கும் செய்தி எழுதுபவரின் பெயரிடும் நிலைமை இருக்கவில்லை. எனினும் பத்திரிகையில் வெளியான ஒரு செய்தியை எழுதியவர் யார்,அதைக் கையாண்டு ‘எடிட்’ செய்து, பக்கத்துக்கு அங்கீகரித்து அனுப்பிய உதவிஆசிரியர் யார் என்பதை ஆண்டுகள் கழிந்தும் கண்டுபிடிக்கும் ஒரு முறைமையை ஆசிரியர் சிவநாயகம் அறிமுகப்படுத்தினார்.

அதன்படி ஒவ்வொரு செய்தியாளருக்கும் ஓர் எண் கொடுக்கப்பட்டிருக்கும். அதே போல ஆசிரியர் உட்பட ஒவ்வொரு உதவி ஆசிரியருக்கும் ஓர் எழுத்துக் குறியீடு அடையாளமாகக் கொடுக்கப்படும். ஒவ்வொரு செய்தியின் முடிவிலும் அந்தக் குறியீடும் எண் இலக்கமும் இருக்கும்.

நான் தினபதியில் சேர்ந்த காலத்தில் எனக்குத் தரப்பட்ட இலக்கம் 6. நான் எழுதிய செய்தி ஒன்றை ‘எ’ என்ற எழுத்து ஒதுக்கப்பட்ட உதவி ஆசிரியர் ‘எடிட்’ செய்து, தலைப்புப் போட்டு, பிரசுரத்துக்கு அனுப்பியிருப்பாராயின் அந்தச் செய்தியின் இறுதியில் (எ – 6) என்று குறியீடு பதியப்பட்டிருக்கும். சில ஆண்டுகள் கழித்து அந்தச் செய்தியைப் பார்ப்பவருக்கும் அந்த நேரத்தில் 6 ஆம் இலக்கச் செய்தியாளரின் செய்தியை ‘எ’ என்ற எழுத்து ஒதுக்கப்பட்ட உதவி ஆசிரியர் ‘எடிட்’ செய்து பிரசுரித்துள்ளார் என்ற தகவல் தெரியும். ஆனால் குறியீட்டு வடிவத்தில் விடயம் இருப்பதால் வெளியாளர்கள், பொதுமக்கள் இதனைக் கண்டுபிடிக்கமுடியாது.

இப்படிச் செய்தியின் முடிவில் இருக்கும் இலக்கத்தை வைத்தே ஒவ்வொரு செய்தியாளருக்குரிய கொடுப்பனவை கணக்குப் பிரிவு வரவிட்டு மொத்த வேதனத்தைப் பதிந்து, மாதச் சம்பளத்தைக் கணக்கிட்டுத் தீர்மானிக்கும்.

நான் செய்தியாளனாகச் சேர்ந்த புதிதில், எனது சீனியர் செய்தியாளர்கள் எனக்குப் பேச்சுக் கொடுத்துக் கடுப்பேற்றினார்கள்.

எனக்கென விளையாட்டுத்துறைக்கான பக்கத்தை ஒதுக்கி அதனை என் பொறுப்பில் தந்தது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஒரு சிரேஷ்ட உதவி ஆசிரியருக்குத்தான் பக்கத்தை ஒதுக்குவார்கள். பத்திரிகைத் துறைக்கு வந்த கையோடு ஒரு ‘பொடியனுக்கு’ இப்படி பக்கத்தை ஒதுக்கியமை அவர்களுக்கு நிச்சயம் எரிச்சலைத் தந்திருக்கும்.

“தம்பி.. இது உமக்குச் சரிப்பட்டு வராது. விளையாட்டுத்துறைப் பக்கம் ஒன்றைப் பொறுப்பெடுத்துக் கையாள்வது என்பது உதவி ஆசிரியரின் வேலை. உதவி ஆசிரியர் நிரந்தர ஊழியர். அவருக்கு மாத வேதனம் உண்டு. நீரோ எழுதும் ஒரு லைன் செய்திக்கு பதினைந்து சதப்படி சம்பளம் பெறும் ரிப்போட்டர். அதனால் விளையாட்டுத்துறைப் பக்கத்தினால் உமக்கு வருமானம் வராது. மற்றது உம்மை நீதிமன்றச் செய்தியாளனாக்கியுள்ளனர். நீதிமன்றச் செய்திகள் அதிகம் பிரசுரமாகா. அவற்றினால் வருமானமும் வராது. பிரச்சினைகள், சட்டச் சிக்கல்கள், தொல்லைகள் தாம் அதிகம் வரும். ஆக வேறு வழியைப் பாரும்” என்றனர் அவர்கள்.

அவர்கள் கூறுவதும் சரிபோல எனக்குப்பட்டது. என்ன செய்வது என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

முதல் மாதச் சம்பளம் ரூ.367 ஐ எடுத்துக் கொண்டு, என்ன செய்வது என நான் யோசித்துக் கொண்டிருந்த போதுதான் ஆசிரியர் சிவநாயகம் தனது அலுவலக அறைக்கு என்னை அழைத்தார்.



அச்சுக்கலை பற்றி நேரில் பார்த்தறிய ஜேர்மனிக்குப் புறப்பட்ட எஸ்.டி.சிவநாயகத்தை வழியனுப்பி வைக்கும் துணைவியாரும் குடும்பத்தவர்களும் நண்பர்களும். அருகில் செல்லையா இராசதுரையும், ஒரு கோடியில் இரண்டாவதாக தமக்கேயுரிய கறுப்புக் கண்ணாடியுடன் பத்திரிகையாளர் கே.கே.இரத்தினசிங்கமும் காணப்படுகின்றனர்.

தாமாகவே எவ்வளவு சம்பளம் எடுத்தீர் எனப் பரிவோடு கேட்டார். நான் கூறினேன். அவர் முகம் சுருங்கியது. ஏன் அப்படி என்பது போல இருந்தது அவர் முகபாவம்.

“விளையாட்டுச் செய்திப் பக்கத்தைக் கவனிக்கின்றீர்கள்தானே...?” என்று கேட்டார்.

“ஆம். ஆனால் அது உதவி யாசிரியர் ஒருவரின் பணி என்பதனால் என் செய்தியாளர் இலக்கம் 6 அந்தச் செய்திகளுக்குப் போடப்படுவதில்லை.” என்றேன் நான்.

“ஓ! நான் அதனைக் கவனிக்கவேயில்லை...!” என்றார். உடனேயே செய்தியாசிரியர் கானமயில்நாதனை இன்டர்கொம்மில் தொடர்பு கொண்டார்.

“விளையாட்டுத்துறைப் பக்கத்துக்கான செய்திகளை வித்தியாதரனே தருகின்றார். அது மொழிபெயர்ப்புச் செய்தியாகவும் இருக்கலாம், அவரது செய்தியாளர் இலக்கத்தைத் தவறாது சேர்த்துக் கொள்ளுங்கள்...!” – என்றார்.

சரிதானே என்பது போல என்னைப் பார்த்துத் தலையசைத்தார் சிவநாயகம் ஐயா.

நான் ‘மெத்த நன்றி!’ என்று கூறிவிட்டு வந்தேன்.

பிறகென்ன? தினசரி ஒரு பக்கம் முழுவதும் விளையாட்டுத் துறை தொடர்பாகப் பிரசுரமாகும் பெரும்பாலான செய்திகள் எனது ஆறாம் இலக்கத்துடன் வெளிவந்தன.

சிரேஷ்ட செய்தியாளர்களை விட என் மாத வேதனம் எகிறியது. அந்த நேரத்தில் ரூபா ஆயிரத்து எண்ணூறு, இரண்டாயிரம் என்பது ஓர் எக்ஸ்யூட்டிவ் சம்பளம் போன்றது. பத்திரிகைத் துறையில் சேர்ந்து இரண்டாம் மூன்றாம் மாதமே அந்த நிலையை நான்



எழுத்துகளை வரி.வரியாக அச்சுவரிசையாக்கும் லைனோ இயந்திரம்

எட்டினேன்.

அப்போதுதான் நிலைமை மேலும் எனக்குச் சாதகமாக மாறியது. கொடுக்கும் கடவுள் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டிய கதையாக விடயம் மாறியது.

தினபதியில் நான் பணி செய்த எஞ்சிய காலம் முழுவதும் அந்த வாய்ப்பு எனக்குத் தாராளமாகக் கிட்டியது.

எந்த நீதிமன்றச் செய்தி ‘றவுண்டப்’ பினால் அதிகம் செய்தி எழுதி உழைக்க முடியாது என்று என் சீனியர்கள் கூறினார்களோ, அதே நீதிமன்ற ‘றவுண்டப்’ வை வைத்துப் பக்கம், பக்கமாகச் செய்தி எழுதி, தாராளமாக, மிக மிகத் தாராளமாக உழைக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. நாட்டு நிலைமை அதனை எனக்குத் தந்தது.

ஆங்கிலமும், சிங்களமும் தெரியாமல் நீதிமன்றச் செய்தி சேகரிக்கப் புகுந்த நான் அதில் தேறும் அளவுக்கு எனக்கு வாய்ப்பும், அனுபவமும், தொடர்புகளும் கூடக் கிடைத்தன. எழுத்துத் துறையில் என் தனித்துவத்தைக் காட்டும் சந்தர்ப்பமாகவும் அது முகிழ்ந்தது.

அவற்றின் விவரத்தை நாளை பார்ப்போம்.

(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 6** | **கணிதம்** | **அலகு 11**

## காரணிகளும் மடங்குகளும்

### காரணிகள்

ஒரு முழு எண்ணை இரண்டு முழு எண்களின் பெருக்கமாக எழுதுவோமானால் அவ்விரு எண்களும் முதல் எண்ணின் காரணிகள் எனப்படும்.

உ+ம்
1) 2 = 1 x 2
இங்கு 2 இன் காரணிகளாக 1, 2 ஆகும்.

2) 8 = 1 x 8
= 2 x 4
இங்கு 8 இன் காரணிகளாக 1, 2, 4, 8 ஆகும்.

3) 25 = 1 x 25
= 5 x 5
இங்கு 25 இன் காரணிகளாக 1, 5, 25 ஆகும்.

4) 18 = 1 x 18
= 2 x 9
= 3 x 6
இங்கு 18 இன் காரணிகளாக 1, 2, 3, 6, 9, 18 ஆகும்.

**பின்வரும் எண்களின் காரணிகளைக் காண்க**

1. 3 = .......... x ..........
3 இன் காரணிகளாக ...........

2. 6 = ......... x ........
= ........ x .......
6 இன் காரணிகளாக ...................

2. 30 = .......... x ..........
= ......... x ..........
= ......... x ..........
= ......... x ..........
30 இன் காரணிகளாக ....................

1. **10 x 10** பெருக்கல் அட்டவணையைப் பயன்படுத்தி காரணிகளைக் காணல்

| X | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 2 | 2 | 4 | 6 | 8 | 10 | 12 | 14 | 16 | 18 | 20 |
| 3 | 3 | 6 | 9 | 12 | 15 | 18 | 21 | 24 | 27 | 30 |
| 4 | 4 | 8 | 12 | 16 | 20 | 24 | 28 | 32 | 36 | 40 |
| 5 | 5 | 10 | 15 | 20 | 25 | 30 | 35 | 40 | 45 | 50 |
| 6 | 6 | 12 | 18 | 24 | 30 | 36 | 42 | 48 | 54 | 60 |
| 7 | 7 | 14 | 21 | 28 | 35 | 42 | 49 | 56 | 63 | 70 |
| 8 | 8 | 16 | 24 | 32 | 40 | 48 | 56 | 64 | 72 | 80 |
| 9 | 9 | 18 | 27 | 36 | 45 | 54 | 63 | 72 | 81 | 90 |
| 10 | 10 | 20 | 30 | 40 | 50 | 60 | 70 | 80 | 90 | 100 |

**மேலே உள்ள பெருக்கல் அட்டவணையைப் பயன்படுத்தி 6, 24, 40 களின் காரணிகளைக் காண்போம். அட்டவணையின்படி**

6 = 1 x 6
= 2 x 3
= 3 x 2
= 6 x 1

24 = 3 x 8
= 4 x 6
= 6 x 4
= 8 x 3

40 = 4 x 10
= 5 x 8
= 8 x 5
= 10 x 4

எனவே
1) 6 இன் அட்டவணையிலிருந்து பெறப்பட்ட காரணிகளாக 1, 2, 3, 6 ஆகும்.

2) 24 இன் அட்டவணையிலிருந்து பெறப்பட்ட காரணிகளாக 3, 4, 6, 8 ஆகும்.

3) 40 இன் அட்டவணையிலிருந்து பெறப்பட்ட காரணிகளாக 4, 5, 8, 10 ஆகும்.

2. **வகுத்தல் மூலம் காரணிகளைக் காணல்**

எண் ஒன்றின் காரணியால் அவ்வெண் மீதியின்றி வகுபடும்.

1) 8
8 ÷ 1 = 8 மீதி 0
8 ÷ 2 = 4 மீதி 0
8 ÷ 4 = 2 மீதி 0
8 ÷ 8 = 1 மீதி 0
8 ÷ 5 = 1 மீதி 3
8 ÷ 6 = 1 மீதி 2
8 ÷ 3 = 2 மீதி 2
8 ÷ 7 = 1 மீதி 1
இங்கு 8 இன் காரணிகளை இனங்காண வகுத்தலின்போது மீதியின்றி வகுபட்டவை 1, 2, 4, 8 ஆகும். வகுத்தலின்போது மீதியுடன் வகுபட்டவை 3, 5, 6, 7 ஆகும். ஆகவே 8இன் காரணிகளாக 1, 2, 4, 8 ஆகும்.

**பின்வரும் எண்களின் காரணிகளை 10 X 10 அட்டவணையைப் பயன்படுத்தி காரணிகளைக் காண்க**

1) 28 = ..................
2) 36 = ..................
3) 60 = ..................
4) 25 = ..................
5) 90 = ..................
6) 45 = ......................
7) 48 = ......................
8) 64 = ......................
9) 15 = ......................
10) 100 = ....................

**பின்வரும் எண்களின் காரணிகளை வகுத்தல் முறை மூலம் காண்க**

1) 72 = ................
2) 65 = ..................
3) 55 = .................
4) 17 = ...................
5) 11 = ...................
6) 36 = ...................
7) 75 = ...................
8) 70 = .....................
9) 60 = ......................
10) 30 = .....................

### மடங்குகள்

ஒரு முழுஎண்ணை இன்னொரு முழு எண்ணால் பெருக்கும் போது கிடைக்கும் எண்ணானது அவ்வெண்ணின் மடங்காகும்.

உ + ம் -
1) 4 இனை 1, 2, 3, 4, 5 எனும் முழு எண்ணால் பெருக்குக.

4 x 1 = 4
4 x 2 = 8
4 x 3 = 12
4 x 4 = 16
4 x 5 = 20

இங்கு 4இன் மடங்குகளாக 4, 8, 12, 16, 20 ஆகும்.

**பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க**

| மடங்குகள் x | 2 | 4 | 5 | 9 | 10 |
|---|---|---|---|---|---|
| 3 | | | | | |
| 5 | | | | | |
| 7 | | | | | |
| 6 | | | | | |
| 8 | | | | | |

### வகுபடுதன்மை

முழு எண் ஒன்று இன்னொரு முழு எண்ணால் மீதியின்றி வகுபடுமாயின் "வகுபடுதன்மை" உடையது எனப்படும்.

* ஓர் எண் இரண்டால் வகுபட வேண்டும் எனின் அவ்வெண்ணின் இறுதி இலக்கமானது 0, 2, 4, 6, 8 ஆக அமைதல் வேண்டும்.
* ஓர் எண் ஐந்தால் வகுபட வேண்டும் எனின் அவ்வெண்ணின் இறுதி இலக்க மானது 0, 5 ஆக அமைதல் வேண்டும்.

(07ஆம் பக்கம் பார்க்க)

ஆக்கம் : திரு. சற்குணராசா செந்தூரன் - கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

வழிகாட்டலும் ஆலோசனையும் -
திருமதி சுதர்சினி விக்னமோகன் - விரிவுரையாளர்
யா/ தேசிய கல்வியியற் கல்லூரி

# 3 கோடி ரூபா பெறுமதியிலான மருத்துவ உபகரணங்கள் முஸ்லிம் எயிட் ஸ்ரீலங்கா நிறுவனத்தால் பிரதமரிடம் சேர்ப்பு




கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்ப தற்கு அவசியமான சுமார் 30 லட்சம் ரூபா மதிப்பிலான மருத்துவ உபகரண தொகுதி 'முஸ்லிம் எயிட் ஸ்ரீலங்கா' நிறுவனத்தால் பிரதமர் மஹிந்தராஜபக்ஷவிடம் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) அலரிமாளி கையில் வைத்து கையளிக்கப்பட்டது.

வயோதிபர்கள் மற்றும் சிறுவர்களுக்காக பயன்படுத்தப்படக்கூடிய 3 வென்டி லேடர்கள், 4 ஒக்சிஜன் கருவிகள், 3,000 பீ.பீ.ஈ. தொகுதிகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டன.

ஐக்கிய அமெரிக்காவின் அமெரிகெயார்ஸ் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் முஸ்லிம் எயிட் தலைமையகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

1985 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் முஸ்லிம் எயிட் தலைமையகம் இதுவரை சுமார் 20 இற்கும் அதிகமான உலக நாடுகளுடன் இணைந்து நிவாரண மற்றும் அபிவிருத்தி நிறுவனமாக செயற்பட்டு வருகிறது.

முஸ்லிம் எயிட் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் சுனாமி பேரழிவைத் தொடர்ந்து 2005 ஆம் ஆண்டு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நீதி அமைச்சர் அலி சப்றி, இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே, பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன, முஸ்லிம் எயிட் நிறு வனத்தின் பணிப்பாளர் பைஸர் கான் உள்ளிட்ட முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தும்பு ஏற்றுமதித் தொழிற்சாலை புத்தளத்தில் பாரிய தீ விபத்து

புத்தளம் மதுரங்குளி விருதோடை பகுதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான தும்பு ஏற்றுமதி தொழிற்சாலையில் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) காலை 10.30 மணியளவில் தீ ஏற்பட்டு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக புத்தளம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது பொதுமக்களின் உதவியுடன் முப்படையினர், புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள், புத்தளம் மற்றும் சிலாபம் ஆகிய நகர சபைகளின் தீயணைக்கும் பிரிவினர், கடற்படையின் தீயணைக்கும் பிரிவினர் கூட்டாக பல மணி நேரப் போராட்டத்துக்கு மத்தியில் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதன்போது குறித்த தும்புத் தொழிற்சாலையில் உள்ள பல இயந்திரங்கள் தீக்கிரையாகியுள்ளன. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க தும்பும் முழுமையாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

குறித்த தும்பு ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலையில் இவ்வாறு திடீரென தீ பரவியமைக்கான காரணத்தைக் கண்டறிவதற்கான மேலதிக விசாரணைகளை புத்தளம் தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, தீயால் எரிந்த தும்பு தொழிற்சாலையை புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக் உள்ளிட்ட நகர சபை உறுப்பினர்கள் சிலர் நேரில் சென்று பார்வையிட்டனர்.



# துப்பாக்கியால் சுட்டு நபர் ஒருவர் கொலை

ஊரகஸ்மங்ஹந்திய, தேவத்த சந்தியில் நபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுச் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு 10.15 மணியளவில் குறித்த நபரின் வீட்டிற்கு அருகில் வைத்து இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

30 வயதுடைய ஒருவரே இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் ஊரகஸ்மங்ஹந்திய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரிசியின் விலை விரைவில் குறையும்

எதிர்வரும் சில வாரங்களில் அரிசியின் விலை குறைவடையும் என்று நெல் கொள்வனவு சபையின் உபதலைவர் துமிந்த பிரியதர்ஷன தெரிவித்துள்ளார்.

சிறுபோக நெற்செய்கையில் அறுவடை செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி சந்தைக்கு விநியோகிக்கும் வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சந்தையில் அரிசியின் விலை விரைவில் குறைவடையும் என்று அவர் கூறினார்.

இதேவேளை அரிசி விலையை முறையாக முன்னெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# தனிமைப்படுத்தல் மீறல் 417 பேர் கைதாகினர்

நாட்டில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 417 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 47 ஆயிரத்து 240 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாட்டை மீறி மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறுவதற்கு முயற்சித்த 165 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 6** **கணிதம்** **அலகு 11**

## காரணிகளும் மடங்குகளும்

**06 ஆம் பக்கத் தொடர்ச்சி ......**

உ + ம் -

1) 2654892 இவ்வெண் இரண்டால் வகுபடுமா?
இறுதி இலக்கம் = 2
ஆகவே இவ் எண்ணானது இரண்டால் வகுபடும்.

2) 65875 இவ்வெண் ஐந்தால் வகுபடுமா?
இறுதி இலக்கம் = 5
ஆகவே இவ் எண்ணானது ஐந்தால் வகுபடும்.

3) 568210 இவ்வெண் பத்தால் வகுபடுமா?
இறுதி இலக்கம் = 0
ஆகவே இவ் எண்ணானது பத்தால் வகுபடும்.

4) 584623 இவ்வெண் இரண்டால் வகுபடுமா?
இறுதி இலக்கம் = 3
ஆகவே இவ் எண்ணானது இரண்டால் வகுபடாது.

5) 487592 இவ்வெண் ஐந்தால் வகுபடுமா?'
இறுதி இலக்கம் = 2
ஆகவே இவ் எண்ணானது ஐந்தால் வகுபடாது.

6) 89457 இவ்வெண் பத்தால் வகுபடுமா?
இறுதி இலக்கம் = 7
ஆகவே இவ் எண்ணானது பத்தால் வகுபடாது.

* ஓர் எண் பத்தால் வகுபட வேண்டும் எனின் அவ்வெணின் இறுதி இலக்கமானது 0 ஆக அமைதல் வேண்டும்.

**பின்வரும் அட்டவணையில் 2, 5, 10 ஆல் வகுபடுமா ஆம் / இல்லை எனக் குறிப்பிடுக.**

| எண்கள் | 2 | 5 | 10 |
|---|---|---|---|
| 5848204 | | | |
| 652645 | | | |
| 70260 | | | |
| 944582 | | | |
| 12485 | | | |

**இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.**

# பஸில் நாடாளுமன்று வருகின்றமையால் நாடு எதிர்நோக்கும் பிரச்சினை தீராது!

## இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர கூறுகிறார்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்திற்குள் நுழைவதன் மூலம் நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தீர்க்கப்படா என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

பஸில் ராஜபக்ஷ பொறுப்பேற்ற மறுநாளே பிரச்சினைகள் மறைந்துவிடாது என்றும் நாடு பாரிய போராட்டத்தை எதிர்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கு மக்களும் பங்களிக்க வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

ஏனென்றால் நாம் அனைவரும் இந்த நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# பொலிஸ் உயரதிகாரிகள் 8 பேருக்கு இடமாற்றம்

கொழும்பு, ஜூலை 05

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் 7 பேர் உட்பட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சேவை தேவையின் அடிப்படையில் உடன் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான நந்தன முனசிங்க, அஜித் றோஹண, பத்திநாயக்க, தர்மரத்ன, ஜயலத், கொடிதுவக்கு, தமிந்த மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் விஜயசேன ஆகிய 8 அதிகாரிகளே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 56

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**165. உங்களைச் சந்திக்க வந்தவர்களின் நோக்கம் அந்த முயற்சிக்கு அவர்கள் ஆதரவு தரமுடியாது என்பதா?**

உங்களது ஊகம் சரிதான். வந்தவர்கள் கண்ணியமானவர்கள். பல காலம் எல்லோரும் ஒன்றாக இயங்கியவர்கள். நடப்பது என்னவென்பதையும் புரிந்திருந்தார்கள். ஆனால் வன்னியிலிருந்து வந்த வழிமுறைகளை அவர்கள் பின்பற்ற வேண்டியிருந்தது.

அவர்கள், டக்ளஸ் தேவானாந்தாவிற்கு விடப்பட்ட அழைப்பு மீளப்பெறப்படவேண்டும், அவரோ அவரது கட்சியோ பங்குபற்றுவதானால் விடுதலைப்புலிகள் வெளியேறுவர், அத்தோடு கூட்டணியின் பக்கத்தில் விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்பவர்களே பங்குபற்ற வேண்டும், முக்கியமாக கலாநிதி நீலன் திருச்செல்வத்துக்கு எது வித முக்கியத்துவம் இருக்கக் கூடாது என்றனர்.

டக்ளஸ் தேவானந்தா அந்த தருணம் அரசாங்கத்துக்கு ஆதரவாக இருந்தாலும், இந்திய ஒப்பந்தத்தை ஏற்று சுயாட்சி என்ற கொள்கையில் இருந்தவர். ஆகவே ஒரு தீர்வு என வரும் போது அவரையும் அழைக்கலாம் என்று விளக்கப்பட்ட போதும் வந்தவர்கள் விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற அவர்கள் நிலைப்பாடே வெளிப்படுத்தப்பட்டது.

கலாநிதி நீலன் திருச்செல்வத்திற்கு விடுக்கப்பட்ட அழைப்பு மற்றும் எப்படியான தீர்மானங்கள் மேற்கொள்ளலாம் என்பவை பற்றியும் சர்வதேசத்தில் அதை எப்படி முன்னெடுக்கலாம் என்பன குறித்து எல்லாம் பேசினோம்.

அத்தோடு கூட்டணி என ஒரு கட்சியை அழைத்தால் யார் பங்குபற்றுவது என்பது அவர்களை பொறுத்ததேயன்றி நாம் தலைபோட்டு நியமிப்பது முறையல்ல என்பதும் விளங்கப்படுத்தப்பட்டது. ஆனால் வந்தவர்களோ அவைதான் தங்களுக்கு தெரிவிக்கப்பட்டது என்பதில் சௌகரியம் காட்டினார்கள். தொடர்ந்து சில சந்திப்புக்கள் நடந்தாலும் இந்த முயற்சிகள் முன்னேறவில்லை.

**166. இப்படியான ஒரு சந்தர்ப்பத்தை ஆஸ்திரேலியா தமிழ் மக்கள் கவனிக்கவில்லையா?**

ஆஸ்திரேலியா அரசின் தரப்பாலும் அரசை நடத்திய ஆஸ்திரேலியாவின் தொழிலாளர் கட்சியின் அங்கத்தினரான தமிழ் மக்களுக்கும் இதனை ஊக்குவிக்க கோரப்பட்டது. பலர் அமைப்பாளர்களுடன் பேசினார்கள். அப்படியிருந்தும் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை மாற்றவில்லை. இருந்தும் மேலும் ஒரு முயற்சி வெளிவிவகார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது. பொது நல நாடுகளின் பிரதமர்களது கூட்டம் நியூசிலாந்தில் நவம்பர் 10 - 13, 1996



இல் நடைபெற இருந்தது. அந்தக் கூட்டத்திற்கு சந்திரிகா பங்குபற்றும் அறிவிப்பு இருந்தால் அந்த சந்தர்ப்பத்தை பாவித்து விடுதலைப் புலிகளின் அமைப்பாளர் ஜெயகுமார், கலாநிதி எலியேசர், நான் இன்னும் இருவர் அங்கு சந்திரிகாவுடன் சில முக்கிய பிரதமர்களையும் நேரடியாகக் கலந்து பேசுவதற்கு ஏற்பாடு இருந்தது. அவர்களுடன் கலந்து வருபவர்களின் பெயர்களை வெளிவிவகார அமைச்சிற்கு கொடுத்திருந்தேன். ஜெயகுமாருக்கும் அவர்கள் சார்பாக வர இருந்த இன்னொருவரும் ஆஸ்திரேலிய பிரஜைகளாலும் பிரதமர்கள் மகாநாட்டையொட்டி விசா எடுத்திருக்க முடியாதிருந்தது. வெளிவிவகார அமைச்சு அதனைச் சரிசெய்து, எங்களைச் சந்தித்து சந்திப்பிற்கு அழைத்து செல்வதாக ஏற்பாடு. ஜெயகுமார் என்னை தொடர்பு கொண்டு தான் ஒரு சில நாளகளுக்கு மெல்போனில் இருப்பது நிச்சயமில்லை என்பதால் இன்னொருவருடன் தொடர்பில் இருக்கும்படியும், தகவல் வந்ததும் தான் புறப்பட்டு வந்து சந்திப்பேன் என்று சொல்லிப் புறப்பட்டார். அவர் அப்போது என்னுடன் நேரடித் தொடர்பில் இருக்கவில்லை. தொடர்பு கொள்ள சொன்னவரோடு தொடர்பிலிருந்து விவரங்கள் வந்ததும் புறப்பட வேண்டிய நேரத்தையும். மெல்போன் விமான நிலையத்தில் சந்தித்தால் மற்றவை ஒழுங்குபடுத்தியிருப்பதாகவும் தெரிவித்தேன். போக வேண்டிய நாளும் வந்து நேரமும் நெருங்கியது. தகவல் ஏதும் வரவில்லை. அத்துடன் கலாநிதி எலியேசரை தொடர்பு கொண்ட போது அவர் தனக்கு சொல்லப்பட்டாலும் ஜெயகுமாரிடமிருந்து புறப்பட்டு வருமாறு தகவல் தராததால் எப்படி போவது, மேலும் அமைப்பாளர் வராமல் நாம் போய் என்ன பிரயோசனம் எனக் கையை விரித்தார்.



நானும் தொடர்பில் இருந்த அதிகாரிக்கு நாங்கள் வரவில்லை என அறிவித்த பொழுது, பரவாயில்லை, தற்போது வரும் செய்திகளின்படி சந்திரிகா வரக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்றும் தெரிவித்து பின்னர் முன்னெடுப்போம் எனக் கூறப்பட்டது.

மூன்று நாளகளுக்குப் பிறகு அந்த அதிகாரி தொலைபேசியில் பேசிய போது அவரது குரலில் கோபமும் ஒரு விரக்தியும் ஓர் அங்கிதமும் இழையோடியது. நீங்கள் வரவில்லை, சரி, ஆனால் நடந்தது தெரியுமா என்று விவரித்தார். இவை படிப்பினையாக இருக்கும் என்று முடித்தார். எனக்குத் தான் மெல்போனில் இருக்க மாட்டேன், அறிவிக்கும் போது தகவல் வருவேன் என்று சொல்லிப்போன ஜெயகுமார் நியூசிலாந்துக்குப் பயணம் செய்திருக்கிறார். ஏனெனில் அங்கு விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் சந்திரிகாவுக்கு எதிராக நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களை மேற்பார்வையிடவும் தலைமை தாங்கி நடத்துவதற்காகவும் போனவர், நியூசிலாந்து குடிவரவு அதிகாரிகளால் அனுமதி மறுக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்ட போது, அவருக்காகத் தொடர்பு கொண்டவர்களிடம் தான் ஆஸ்திரேலியா அரசின் ஆதரவில் வருகிறேன், அவர்களைத் தொடர்பு கொள்ளலாம் எனக் கூறியமையால் அந்தத் தொடர்பாடல் விவரங்கள் அதிகாரிகளுக்கு வெளிவந்தது. ஆனால் அதில் ஈடுபட ஆஸ்திரேலியா அதிகாரிகள் விரும்பாதமையால் பிரதமர்கள் மகாநாடு முடியும் வரை தடையில் வைத்திருந்து பின்னர் ஜெயகுமாரை நாடு கடத்தினர்.

நான் இது பற்றி பேசிய போது அது தனது முட்டாள்தனம் என்றும், கண்டனக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டதால் தான் நிற்க வேண்டும் என்று புறப்பட்டதாகவும் அங்கிருந்து வந்து சேர்ந்து கொள்ள எண்ணினார் எனவும் சொன்னார்.


கௌரவமாக வாழ்ந்து, அவர் விடுதலைப் புலிகளுக்கு மனச்சுத்தியோடும் அர்ப்பணிப்போடும் உழைத்தவர். ஆனாலும் பின் அங்கு செல்ல முடியாது என்ற தடை உத்தரவுகளால் மனமுடைந்திருந்தார். பேச்சு வார்த்தைகளில் விடுதலைப் புலிகளைப் பங்குபற்றச் செய்வதற்காக இப்படியான உந்துதல்கள் பிற நாடுகளிலும் நடந்தன. அப்படியான சில நிர்ப்பந்தங்களால் அவர்கள் தொடக்கத்தில் பங்கு பற்றினாலும், பின்னர் நிராகரித்து வெளியேற, இவற்றினால் சர்வதேச ஆதரவு சந்திரிகாவுக்குச் சேர தொடங்க, அவர் புலிகளைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

(வளரும்.....)

**ஜனனி தேவானந்த்**
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# மெய்நிகர் வகுப்பறை 27


## Online Classroom




இன்று பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் இயங்காத சூழலில் வீடுகளில் ஒவ்வொரு மூலைகளிலும் ஒவ்வொரு இலத்திரனியல் சாதனங்களுடன் குடும்ப அங்கத்தவர்கள் காணப்படுகின்றார்கள். மாணவர்களுக்கு பகல் இரவாக பாடசாலை வகுப்புக்களும் தனியார் வகுப்புக்களும் நடக்கின்றன. மெய்நிகர் வகுப்பறைகளில் மாணவர்கள் மூழ்கித் தவிக்கிறார்கள். இப்போது மெய்நிகர் வகுப்பறைகளில் கற்பித்து முடித்துவிட்டோம் என்று ஆசிரியர்கள் கூறத் தொடங்கிவிட்டார்கள். இனி, மாணவர்களுக்கு பரீட்சை எப்படி நடாத்துவது என்பது தான் கல்விப்புலத்தின் கேள்வியாக உள்ளது. இதற்கான விதிமுறைகள் வழிகாட்டல்களைத் தயாரிப்பதில் பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை தமது நேரத்தை செலவிட்டுக் கொண்டிருக்கின்றன. முன்பள்ளிகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் வரை ஆசிரியர்களும் விரிவுரையாளர்களும் தாம் இணையவழியில் சிறப்பாக கற்பித்த திருப்தியில் உள்ளார்கள் போலும். ஆனால் அந்தத் திருப்தியுடன் இருந்து விட முடியாது. எமது கல்வி முறையில் அதன்வழி வந்த சமூகத்தில் கற்றால் போதாது அதற்கான பரீட்சைகள் நடாத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டாலே கற்றதன் திருப்தியை அடைய முடியும் என்ற நிலை. ஆகவே எவ்வாறு பரீட்சைகளை எந்தவித மோசடிகளும் அற்று நடாத்துவது என்பன பற்றி சிந்திக்கிறார்கள். மெய்நிகர் வெளியில் இதற்கான முறைகளை பலரும் ஆராய்ந்து வருகின்றனர். அதாவது மெய்நிகர் வெளி வழி மாணவர்களின் கல்விமட்டத்தை சரியாக அளவிட சிறந்த ஏற்றுக் கொள்ளக் கூடிய வழிமுறைகளை பலவழிகளிலும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் பரீட்சை நடாத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய ஒரு செயலியைப்பற்றி இங்கு தெரிவிப்பது கல்விப்புலத்திற்குப் பயனுள்ளதாக அமை யும் என்று நம்புகின்றேன். இதனை சில தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல உலகளாவிய பல்கலைக்கழகங்களில் பயன்படுத்துகின்றனர்.

'ரெஸ்பான்டஸ் லாக் டவுன் செயலி' **(Respondus LockDown Browser)** பரீட்சை நடத்துவதற்கான ஒரு மென்பொருளாக அறிமுகமாகியுள்ளது. இது ஒரு இணையவழி மேற்பார்வைக்கான மென்பொருளாகும், இது கல்வித் துறையில் பரீட்சையை நடத்துவதற்கான ஒரு மென்பொருளாக அறிமுகமாகியுள்ளது. அதாவது மாணவர்கள் பரீட்சை மேற்கொள்ளும் போது அவர்களைக் கண்காணிக்கப் பயன்படுகிறது. ஒரு பரீட்சையை வீட்டிலிருந்து எழுதுகின்ற மாணவர் ஏமாற்றவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகக் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது பரீட்சை வினாக்களுக்கு விடையளிப்பதற்கு




விடயங்களை புத்தகங்களிலோ இணையவழியிலோ பார்த்து எழுதவில்லை வீட்டிலுள்ள ஏனையவர்களின் உதவியுடன் செய்யவில்லை சுயமாக செய்யப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கானதாகும்.

வீட்டில் ஒரு தேர்வில் மாணவர் ஒருவர் அமர்ந்திருக்கும் போது, வெளிப்புற உதவி எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்த கண்காணிக்கப்பட வேண்டும். அதற்காக மாணவன் சொந்தக் கணினியில் ஒரு தேர்வில் அமர்வதற்கு முன், மாணவனின் கமரா வழியாக கண்காணிக்கப் பயன்படும் கண்காணிப்பு மென்பொருளை முதலில்; பதிவிறக்க வேண்டும்.

இதில் விரும்பும் இடத்தில் தேர்வில் அமர முடியும். பரீட்சை பாதுகாப்பாகவும் 100% நம்பகத்தன்மையுடனும் இருக்க, வீடியோ மூலம் கண்காணிக்க மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது, எனவே தேர்வு மோசடி இல்லாது நம்பகத்தன்மையுடையதாகிறது.

இங்கு, மாணவரொருவர் பரீட்சை செய்வதை வீடியோவில் பதிவு செய்யப்படுகின்றது. பின்னர், ஏதேனும் மோசடி நடந்துள்ளதா என்பதை மேற்பார்வையாளர் பார்க்க முடியும்.

இந்த மெய்நிகர் பரீட்சையில் ஒருவர் விரும்பும் எந்த நேரத்திலும் தேர்வில் அமரலாம். ஆனால், இது ஒரு உண்மையான தேர்வு அமைப்பு போன்றது. வெப்கேம் வழியாக ஒருவர் பரீட்சை செய்யும்போது ஒரு இணையவழி மேற்பார்வையாளர் உண்மையில் அவரைப் பார்க்கிறார். உண்மையான வகுப்பறை அமைப்பைப் போலவே அசாதாரணமான எதையும் அவர்கள் கவனித்தால் அவர்கள் தலையிடலாம்.

இதே வேளை தானியங்கி முறையில் திட்டமிடப்பட்ட இணையவழி தேர்வுகளும் உண்டு. இதில் சாத்தியமான மோசடி அல்லது வெளிப்புற உதவிகளின் எந்த நிகழ்வுகளையும் கண்டறிய கணினி மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது. வெவ்வேறு மென்பொருள்கள் திறக்கப்படும்போதோ அல்லது அறையில் வேறொருவர் இருந்தாலோ அதைக் கண்டறிய முடியும். இதுபோன்ற எந்தவொரு நிகழ்விற்கும் ரிமோட் மேற்பார்வையாளரால் எச்சரிக்கப்படு கிறது, பின்னர் அவை அவற்றை மதிப்பாய்வு செய்து அறிக்கையிடும்.

இந்த இணையவழிப் பரீட்சையில் பங்கு கொள்ளும் ஒருவர் தாம் தேர்வு எடுக்கும் இடம் பொருத்தமானது என்பதையும், அங்கு உள்ள தொழில்நுட்பம் நம்பகமானது என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

'ரெஸ்பான்டஸ் லாக் டவுன் செயலி' **(Respondus LockDown Browser)** என்பது ஒரு தனிப்பயன் செயலி ஆகும், இது ஒரு கற்றல் மேலாண்மை அமைப்பினுள் பரீட்சை சூழலை பாதுகாக்கிறது. 2000 இற்கும் மேற்பட்ட உயர் கல்வி நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகிறது, லாக் டவுன் செயலி என்பது வகுப்பறைகள் அல்லது திட்டமிடப்பட்ட சூழல்களில் ஒன்லைன் தேர்வுகளைப் பெறுவதற்கான ஒரு தரம் வாய்ந்த உலாவி ஆகும்

### 'ரெஸ்பான்டஸ் லாக் டவுன் செயலி'(Respondus LockDown Browser) எவ்வாறு இயங்குகிறது

மதிப்பீடுகள் **(Assignment)** முழுத் திரையில் காட்டப்படும், அவற்றைக் குறைக்க **(Minimize)** முடியாது

பின் **(Back)**, முன்னோக்கி **(Forward)**, புதுப்பித்தல் **(Refresh)** மற்றும் நிறுத்து **(Stop)**, தவிர மற்றைய உலாவி மெனு மற்றும் கருவிப்பட்டி தெரிவுகள் அகற்றப்படுகின்றன.

செய்தி அனுப்புதல், திரை பகிர்வு, மெய்நிகர் இயந்திரங்கள் மற்றும் தொலைநிலை பணிமேடைகள் உள்ளிட்ட பிற பயன்பாடுகளுக்கான அணுகலைத் தடுக்கிறது

அச்சிடுதல் மற்றும் திரை பிடிப்பு செயல்பாடுகள் **(Screen Captured)** முடக்கப்பட்டுள்ளன


மதிப்பீட்டிற்கு, எதையும் நகலெடுத்து ஒட்டுவது **(copy and Paste)** தடுக்கப்படுகிறது

வலது கிளிக் மெனு விருப்பங்கள், செயல்பாட்டு விசைகள், விசைப்பலகை குறுக்குவழிகள் மற்றும் பணி மாறுதல் ஆகியவை முடக்கப்பட்டுள்ளன

மதிப்பீட்டிற்கு மாணவர் சமர்ப்பிக்கும் வரை ஒரு மதிப்பீட்டிலிருந்து வெளியேற முடியாது

லாக்டவுன் உலாவியைப் பயன்படுத்தும் மதிப்பீடுகள் பிற உலாவிகளை அணுக முடியாது

**(தொடரும்...)**



காலைக்கதிர் Kalaikkathir

# சட்டம் மனிதர்களுக்கா? அல்லது மதங்களுக்கும் பிரதேசங்களுக்குமா?

பஸ்றி ஸீ. ஹனியா
LL.B (Jaffna)

சட்டம் என்பதன் பிரதான நோக்கம் பிரச்சினைகள் அற்ற சமூகத்தை உருவாக்கி ஒழுங்கு முறையான நெறியின் கீழ் மக்கள் வாழ்வை நடத்த உதவுவதாகும். இவ்வாறு பிரச்சினைகள் அற்ற சமூகத்தை உருவாக்க வேண்டுமென்றால் சட்டமானது சமமாக இருக்க வேண்டும்.

எது எதுவாக இருந்தபோதிலும் மனித மனங்களைப் பொறுத்தவரைக்கும் ஒரு குறிப்பிட்ட பொது நலமாக சில விடயங்களைப் பார்க்கும்போது சமமாக இருக்க வேண்டும் என நாம் விரும்பும் அதே விடயங்கள் சுயநலமாக இருக்கும்போது சமமற்ற தன்மையை நோக்கிச் செல்கின்றோமோ என்ற வினா எழுகின்றது.

இந்த வினாவுக்கான பதிலை எமது யாப்பின் ஊடாகத் தேடுவது சாலச்சிறந்ததாக இருக்கும். யாப்பு உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரைக்கும் ஒரு பேசுபொருளாகக் காணப்படுகின்ற முக்கிய விடயம் அரசியல் யாப்பின் 16 ஆவது சரத்தின் முதலாவது பிரிவாகக் காணப்படுகின்றது. இதனை சட்டரீதியான புலமைத்துவ நாடு தலைத் தவிர்த்து சாதாரண மொழிநடையில் கூறுவோனால், இலங்கையில் தனியார் சட்டங்களாக உதாரணமாக தேசவழமைச் சட்டம், முஸ்லிம் சட்டம், கண்டியச் சட்டம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறான சட்டங்களின் மூலம் நாட்டின் பல குழுக்கள் ஆளப்படுகின்றபோது இந்தத் தனியார் சட்டத்துக்கும் யாப்பினுடைய சரத்துகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற் படும்போது தனியார் சட்டங்கள் தான் மேலோங்கும் என அரசியல் யாப்பு தெளிவாக உரைக்கின்றது.



### சரத்து 16 (1) என்றால் என்ன? அதன் அர்த்தம் என்ன?

சரத்து 16 (1) என்பது இலங்கையின் 1978 அரசமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் உள்ள ஒரு பிரிவு. 1978 அரசமைப்புக்கு முன்னர் இருந்த அனைத்து எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத சட்டங்களும் 'செல்லுபடியாகும் மற்றும் செயற்படும்' என்று அது கூறுகின்றது. இதன் பொருள் அனைத்துக் குடிமக்களுக்கும் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளுடன் 'முரணாக' இருந்தாலும் இந்தச் சட்டங்கள் செல்லுபடியாகும்.



## சட்டம் ஒரு வெளிச்ச அறை

### பிரிவு 16 (1) குறிப்பிடும் எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத சட்டங்கள் யாவை?

இந்த விதி 1978 இற்கு முன்னர் சட்டங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட 600 இற்கும் மேற்பட்ட சட்டங்களையும், அந்த ஆண்டுக்கு முன்னர் நடைமுறையில் உள்ள எழுதப்படாத சட்டத்தையும் குறிக்கின்றது.

குற்றவியல் நடைமுறை 1976, முஸ்லிம்களின் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் (MMDA) 1954, கண்டியன் திருமணக் கட்டளை 1954, தேசவழமை (pre-emption) 1948, தண்டனைச் சட்டம் கட்டளை 1883 (பிரிவு 365 உட்பட) ஆகியவை இத்தகைய சட்டங்களில் நன்கு அறியப்பட்டவை.

### சரத்து 16 (1) இன் சிக்கல் என்ன?

600 இற்கும் மேற்பட்ட எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத சட்டங்களில் ஏதேனும் ஒரு நபரின் அடிப்படை உரிமைகளை மீறினால் அல்லது மீறப்பட்டால் அதை நீதிமன்றத்தில் சவால் செய்ய முடியாது என்பதனை சரத்து 16 (1) குறிக்கின்றது.

இதன் பொருள் என்னவென்றால், மக்களுக்குச் சமத்துவம் காட்டாத, பாகுபாடு காட்டும் மற்றும் உரிமையை மீறும் சட்டங்களை இலங்கை

> சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற விடயத்துக்கு முன்னர் சட்டமானது சகலருக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும்.

தொடர்ந்து வைத்திருக்கின்றது; மேலும் பாதுகாக்கின்றது.

அனைவருக்கும் சமமான சட்டங்கள் வழங்கப்பட வேண்டும், அனைவருமே ஒரே சட்டத்தின்கீழ் ஆளப்பட வேண்டும், அவ்வாறு ஆளப்படும் போது தான் சமூகமானது நெறிமுறையாக இருக்கும் என்ற அடிப்படை வாதத்துக்கு முரணான வகையில் ஒரே நாட்டுக்குள் வாழும் மக்களுக்குப் பல சட்டங்களைப் பிரித்துக் கொடுத்துவிட்டு அனைவரும் சமமாக பேணப்படுவர் என்று கூறுவது எவ்வாறு சமூகத்தை ஒழுங்குபடுத்தும்?

18 வயதுக்குப் பின்னர்தான் ஒருவரால் திருமண பந்தத்தில் ஈடுபட முடியும் என்ற சட்டத்தைக் கொண்டு வருவதற்கு வைக்கப்பட்ட வாதங்கள் நியாயமானதாக இருந்தால் முஸ்லிம் சட்டத்தின்படி 12 வயதுக்குப் பின்னர் திருமணம் செய்து கொடுப்பது எந்த அடிப்படையில் சரியாக அமையும்? சரி முஸ்லிம் சட்டத்தின் பிரகாரம் 12 வயதுக்குப் பின்னர் திருமணம் செய்து கொடுப்பது சரியாக இருந்தால் பொதுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 18 வயது எல்லை எவ்வாறு சரியாக இருக்கும்?

18 வயதுக்கு முன் திருமணம் செய்யும் முஸ்லிம் அல்லாதோர் சட்டத்தால் தண்டிக்கப்படுவார் எனில், முஸ்லிமாகப் பிறந்த காரணத்தால் ஒருவர் 18 வயதுக்கு முன்னர் திருமணம் செய்தாலும் தண்டிக்கப்படமாட்டார் எனில் சட்டம் இன ரீதியான பிரிவினையை ஏற்படுத்துகின்றதா அல்லது ஒரு மதத்தில் இருப்பவர்களை நேரடியற்ற வலுக்கட்டாயம் மூலம் இன்னொரு மதத்துக்கு நுழைய வைக்கின்றதா? சட்டங்கள் மனிதர்களுக்கா? இல்லை மதங்களுக்கா? இல்லையெனில் ஒருவேளை பிரதேசங்களுக்காக இருக்க முடியுமா?

கண்டியன் சட்டமானது கண்டியில் இருக்கும் சிங்கள மக்களை மட்டும் ஆளுகின்றது எனில், கண்டி பிரதேசம் தவிர்ந்த மற்ற இடங்களில் வாழும் சிங்களவர்கள் அந்தச் சட்டத்தால் ஆளப்படுவதற்குத் தகுதியற்றவர்களா? அல்லது பிரதேச ரீதியாக சட்டம் எனும் பெயரில் ஒரே இன மக்களைச் சமமற்ற ரீதியில் நடத்துகின்றார்களா?

முஸ்லிம் சட்டமானது இலங் கையில் இருக்கும் முஸ்லிம் களை மட்டும் ஆள்கின்றது எனில், ஏன் இங்கு பிரதேச ரீதியான பாகுபாட்டை ஏற்படுத்தாது மதரீதியானபாகுபாடுமட்டும்ஏற்படுத்தப்பட்டுள்ளது? பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் வெவ்வேறு சட்டங்களைக் கொடுத்துப் பிரித்து வைப்பதற்கா இந்தப் பாகுபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது?

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற விடயத்துக்கு முன்னர் சட்டமானது சகலருக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும். மரத்தின் வேர் உறுதியாக இருந்தால்தான் மரத்தால் உயிர்வாழ முடியும். நாம் மரத்தின் வேரைப் பார்ப்பதை விட்டுவிட்டு பழுத்துவிடும் இலைகளில்குறைகூறிக்கொண்டிருக்கின்றோம்.

இப்போது நாம் மேலே எழுந்த வினாவுக்கான விடையை நோக்குவோமானால், மக்களாகிய நாம்தான் இந்தச் சட்டத்தை உருவாக்கினோம் மற்றும் உருவாக்க உறுதுணையாக இருந்தோம்.

நாம் ஓர் இனத்தவராக, மதத்தவராக அல்லது ஒரு பிரதேசத்துக்கு உரியவராக இருக்கும்போது பிரதேச ரீதியான, மத ரீதியான தனியார் சட்டங்



களை ஆதரித்துக் கொண்டிருக்கின்றோம் என்பது சுயநலமாக இருக்கும். மேலும், அனைவரும் ஒரே சட்டத்தின் கீழ் ஆளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் நாம் நினைக்கின்றோம் எனில் அது பொது நலத்தின் வெளிப்பாடாகும். ஆகவேதான் நாம் எவ்வாறான மனநிலையில் இருக்கின்றோம் என்ற பதிலை எமது மனங்களே சொல்லட்டும்.



# மாகாணங்களுக்கிடையிலான பயணத்தடை தொடர்ந்து நீடிப்பு

## ஜூலை 19 வரை அமுலில் இருக்கும் என்று இராணுவத் தளபதி அறிவிப்பு

மாகாணங்களுக்கிடையிலான பயணத் தடை நீடிக்கப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இந்தத் தடை எதிர்வரும் 19ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனாப் பரவல் நிலைமையின் ஆபத்து தொடர்வதால் மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாடு நீடிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தற்போதைய நடமாட்டக் கட்டுப்பாடு தளர்வுகள் நாளை முதல் எதிர்வரும் 14 நாள்களுக்கு அமுலில் இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


எதிர்வரும் 19ஆம் திகதியின் பின்னரே மீளவும் பயணக் கட்டுப்பாடு விதிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## தீர்வுக்காக ஓரணியில் செயற்படுவது தொடர்பில்

# தமிழ்க் கட்சிகளின் கலந்துரையாடல் யாழ். நகரில் ஞாயிறு அன்று தொடங்கியது

## மாவை, செல்வம், சித்தர், சுரேஷ் பங்கேற்பு






(இ.கலையமுதன்)

**தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் செயற்பாடுகளில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தையும் ஓரணியில் இணைத்துச் செயற்படுவது தொடர்பில் முடிவெடுப்பதற்காக யாழ்ப்பாணத்தில் ஞாயிறு கட்சித் தலைவர்கள் ஒன்று கூடினர்.**

யாழ்ப்பாணம், நான்காம் குறுக்குத் தெருவிலுள்ள உள்ள ரெலோவின் அலுவலகத்தில் மாலை 4 மணி முதல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், ஏனைய கட்சிகளின் தலைவர்களான சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்.சிறிகாந்தா, அனந்தி சசிதரன் மற்றும் பொ. ஐங்கரநேசன் உள்ளிட்டோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்காமைக்கான காரணங்கள் தெரியவரவில்லை.

## வேலணையில் கரை ஒதுங்கிய இறந்த கடலாமை



(இ.கலையமுதன்)

யாழ்., வேலணை, துறையூர் கடற்கரையில் கடலாமை ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த கடலாமை இறந்த நிலையில் ஞாயிறு கரை ஒதுங்கியுள்ளது என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஞாயிறு அதிகாலை தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் கரை ஒதுங்கிய கடலாமையை இனங்கண்டு வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அறிவித்தனர்.

இலங்கை கடற்பரப்பில் 'எக்ஸ் - பிரஸ் பேர்ள்' கப்பல் எரிந்து விபத்துக்குள்ளான பின்னர் கடல்வாழ் உயிரினங்கள் தொடர்ச்சியாக உயிரிழந்து கரை ஒதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரையில் தீவகப் பகுதிகளில் ஒரு திமிங்கலம், ஒரு டொல்பின் மற்றும் மூன்று கடலாமைகள் கரை ஒதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊர்காவற்துறையில் பதிவுத் திருமணத்தில் கலந்துகொண்ட பெண்ணுக்கு 'கொரோனா'

### பலரைத் தனிமைப்படுத்த நடவடிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 04

யாழ்., ஊர்காவற்துறைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற பதிவுத் திருமணத்தில் கலந்துகொண்ட பெண்ணொருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

ஊர்காவற்துறை, பருத்தியடைப்புப் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு சனி திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டதை அடுத்து ஊர்காவற்துறை வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகச் சென்றிருந்தார்.

அங்கு அவருக்கு மேற்கொள் ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதியாகி யுள்ளது. அதையடுத்து அவருடன் தொடர்புடையவர்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தபோது, குறித்த பெண் தனது வீட்டுக்கு அருகில் அண்மையில் இடம்பெற்ற பதிவுத் திருமண நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை தெரியவந்துள்ளது..

அதையடுத்து பதிவுத் திருமண நிகழ்வில் கலந்து கொண்டவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

## யாழில் பாவனைக்கு உதவாத பஸ் தரிப்பு நிலையம் அகற்றல்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜூன் 04

யாழ்ப்பாணத்திலுள்ள பாவனைக்கு உதவாத பஸ் தரிப்பிடமொன்று மாநகர சபையால் அகற்றப்பட்டது.

யாழ்.இந்துக் கல்லூரியின் கோரிக்கைக்கு அமைவாக கல்லூரி மைதானத்துக்குப் பக்கத்தில் கஸ்தூரியார் வீதியில் அமைந்திருந்த பாவனைக்கு உதவாத பஸ் தரிப்பு நிலையம் ஞாயிறு யாழ். மாநகர மேயரின் பணிப்புக்கு அமைவாக அகற்றப்பட்டது.

குறித்த பஸ் தரிப்பு நிலையத்தில் பல சமூக விரோதச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன என்று குறித்த பகுதி மக்களால் நீண்ட நாள்களாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் குறித்த பஸ் தரிப்பு நிலையம் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# அபிவிருத்திக்குழு தலைவரின் செயலாளர் என்று கூறிக்கொண்டு அரச அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதே இன்று சிலரின் தேவை!

## மக்கள் பிரச்சினை அவர்களுக்கு அவசியமற்ற ஒன்று என்று இரா.சாணக்கியன் எம்.பி. கடுமையான காட்டம்



அபிவிருத்திக்குழு தலைவரின் செயலாளர் என்று கூறிக்கொண்டு கூட்டங்களுக்கு முன் கதிரையில் இருந்து கொண்டு அரச அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டியதே இன்று சிலருக்கு தேவையாகவுள்ளதே தவிர மக்களின் பிரச்சினையை பார்ப்பதற்கு அவர்களுக்கு தேவையற்ற ஒன்றாகவே உள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தும்பாலை பகுதியில் உள்ள ஆற்றுப் பகுதியில் மண் அகழப்படுவதன் காரணமாக அப்பகுதி விவசாயிகள்,பொதுமக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

தும்பாலை ஆற்றுப்பகுதியில் இரவு வேளைகளில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத மண் அகழ்வுகள் காரணமாக ஆற்றுப்பகுதி ஆழமாகச் செல்வதன் காரணமாக எதிர்காலத்தில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலையேற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் தும்பாளை ஆற்றில் மண் அகழ்வதால் அப்பகுதியில் இரண்டு பாலங்கள் உடைந்து மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலையேற்பட்டதாகவும், தற்போது புதிய பாலம் அமைக்கப்பட்டுள்ளதன் காரணமாக புதிய பாலமும் இந்த மண் அகழ்வால் உடைக்கப்படும் ஆபத்து உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுப்பது இல்லையெனவும், இரவு வேளைகளில் 10 இற்கும் மேற்பட்ட ட்ரக்டர்களில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு முன்னெடுக்கப்படுவதாகவும், இரவு வேளைகளில் வீதிகளில் பெரிய சத்தத்துடன் செல்வதால் மக்கள் பெரும் அசௌகரியங்களுடன் வாழ்ன்றனர் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தினமும் ட்ரக்டர்கள் தமது வீதிகளில் செல்வதால் வீதிகள் முற்றாக சேதமடைந்துள்ள தாகவும், சைக்கிளில் கூட செல்லமுடியாத நிலையுள்ள தாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இன்று தும்பாலை பகுதிக்கு மக்களின் கோரிக்கையை யடுத்து விஜயம் செய்த மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அப்பகுதியை பார்வையிட்டுள்ளார். இதன்போது மண் அகழப்படும் பகுதிக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் அது தொடர்பில் பார்வையிட்டதுடன், உடைந்துள்ள பாலங்களையும் பார்வையிட்டதுடன், சேதமடைந்துள்ள வீதிகளையும் பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து அப்பகுதி மக்களுடனும் கலந்துரையாடி அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

## கொவிட் தொற்றாளர் தொடர்பான தகவல்களை மறைக்க வேண்டிய அவசியம் எமக்குக் கிடையாது

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொரோனா நோயாளர்கள் தொடர்பான தகவல்களை மறைக்க வேண்டிய அவசியம் இல்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம், டெல்டா திரிவுடனான தொற்று உறுதியானவர்கள் இனங்காணப்பட்ட இடங்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுகின்றன என சுகாதார அமைச்சின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அந்த இடங்கள் தொடர்பில் மாற்று நடவடிக்கை எடுக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.






## 3 நாடுகளிடம் 215 கோடி டொலர் கடன் பெறுகின்றது அரசாங்கம்

இலங்கை அரசாங்கம் மூன்று நாடுகளிடமிருந்து சுமார் 215 கோடி அமெரிக்க டொலர்களை கடனாக பெற்றுக் கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியிடம் கையிருப்பில் உள்ள அந்நிய செலாவணித் தொகை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ள காரணத்தால் இவ்வாறு அவசரமாகக் கடன் பெற்றுக்கொள்ள உள்ளது.

இதன்படி, சீனாவிடம் 150 கோடி அமெரிக்க டொலர்களையும், இந்தியாவிடம் 40 கோடி அமெரிக்க டொலர்களையும், பங்களாதேஷிடம் 25 கோடி அமெரிக்க டொலர்களையும் கடனாகப் பெற்றுக்கொள்ள உள்ளது.

இந்தியா மற்றும் பங்களாதேஷிடம் பெற்றுக் கொள்ளும் 65 கோடி அமெரிக்க டொலர் கடன் செலாவணி பரிமாற்ற அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட உள்ளது.

இந்தியாவிடமிருந்து இரண்டு கட்டங்களாக ஒன்பது மாதத்தில் மீள செலுத்தும் வகையில் கடன் பெற்றுக் கொள்ளப்பட உள்ளதுடன், பங்களாதேஷிடம் மூன்று கட்டங்களாக கடன் பெற்றுக்கொள்ளப்பட உள்ளது.

சீனாவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட உள்ள 150 கோடி அமெரிக்க டொலர் கடன் நீண்ட கால அடிப்படையில் கிடைக்கப் பெறவுள்ளது.

## இணையத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்ட சிறுமி; இதுவரை மொத்தமாக 26 பேர் கைதாகினர்

15 வயதான சிறுமியை இணையத்தளம் மூலம் விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுமியை விற்பனை செய்வதற்கான விளம்பரத்தை பிரசுரித்த இணையத்தளத்தின் உரிமையாளரும் அதன் பணக் கட்டுப்பாட்டாளரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

43, 45 வயதான குறித்த நபர்கள் பாணந்துறை மற்றும் பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என விசாரணையின்போது தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரையில் 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் சிறுமியின் தாய் உள்ளிட்ட இரண்டு பெண்களும் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 15 பேர் சிறுமியை பணம் கொடுத்து பெற்றுக் கொண்டவர்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு - கல்கிசை பகுதியில் 15 வயது சிறுமி ஒருவரை இணையத்தளமூடாக பாலியல் செயற்பாடுகளுக்காக கொள்வனவு செய்த மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் தொடர்பில் அண்மையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்படி, குறித்த சிறுமியை பாலியல் நடவடிக்கைகளுக்காக இணையத்தளத்தினூடாக விற்பனை செய்த பிரதான சந்தேகநபர் கடந்த 9 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

குறித்த பிரதான சந்தேகநபர், கல்கிஸையில் வாடகை வீடொன்றில் சிறுமியைத் தடுத்துவைத்து இணையத்தளத்தில் சிறுமியின் நிழற்படத்தை பதிவேற்றி பாலியல் செயற்பாடுகளுக்காக விற்பனை செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய பலரும் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


Australian Skilled Visa
Engineers (Civil & Mechanical), Engineering Diplpma holders in HNDA, NDES, NDT, C & G
Australian Skilled – Recognised Graduate Visa
BSc.Engg from University of Moratuwa or Peradeniya or Jaffna or Ruhuna
HOTLINE: 0766228891
தொடர்புகளுக்கு:-
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.07.2021 இல் வெளியிடப்பெற்றது.




இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். சாரலன்

## 41ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**401. இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படும் நாடு எது?**
**402. இலங்கையில் குறைந்த வயதில் ஆட்சிப்பீடமேறிய நாயக்க வம்ச மன்னன் யார்?**
**403. இலங்கை கிரிக்கெட் அணி ரி - 20 உலகக் கோப்பையை எந்த நாட்டில் வைத்துக் கைப்பற்றியது?**
**404. தமிழில் உள்ள எழுத்துக்கள் எத்தனை?**
**405. தற்போதைய பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி யார்?**
**406. அண்மையில் வட்ஸ் அப்பிற்கு நிகரான செயலியை கண்டுபிடித்த யாழ் மாணவன் யார்?**
**407. யாழ்ப்பாணத்தில் இரண்டாவது மிகப் பெரிய கிராமம் எது?**
**408. 2, 4, 8, 16, 32, ....... என்ற தொடரில் அடுத்து வரும் இரு எண்களையும் எழுதுக?**
**409. இங்கிலாந்து கிரிக்கெட் அணி இதுவரை எத்தனை தடவை சர்வதேச உலகப் கோப்பையை கைப்பற்றி யுள்ளது?**
**410. இதுவரை சர்வதேச உலகக் கோப்பையை அதிக தடவை கைப்பற்றிய அணி எது?**

பெயர் :- ..................................................... அடையாள அட்டை:- ................................
முகவரி :- ..................................................... மின்னஞ்சல் முகவரி:- ................................
தொலைபேசி இலக்கம்:- ...........................

## 39ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**381. சுப்பிரமணியம்**
**382. டார்வின்**
**383. மேற்கிந்திய தீவுகள்**
**384. 1111**
**385. சிவனொளிபாதமலை**
**386. யூரோ கிண்ண தொடர், கோபா அமெரிக்க தொடர்**
**387. 63**
**388. கான் பா டி அல்மெய்டா**
**389. அ.நாகராஜன்**
**390. துட்டகைமுனு**

## 03ஆம் திகதி வெளியான 39ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1. எம். வர்ணபாலன் - யாழ்ப்பாணம்
2. ஏ.துஷான் - நீர்வேலி
3. த.சராதரன் - குப்பிளான் (09 சரி)
4. ஜெ. வினோஜன் - குடத்தனை (09 சரி)
5. ஐ. கார்த்திகன் - யாழ்ப்பாணம் (09 சரி)
6. கே. அனுஷன் - ஏழாலை (08 சரி)
7. செ. ஸ்ரீஇராமச்சந்திரன் (07சரி)
8. பி.தனுஜா - நேரியகுளம் (07 சரி)
9. எச். றிஸ்மிஜா - கண்டி (09 சரி)
10. எஸ். சதுர்ஜினி - அல்வாய் (09 சரி)
11.ஆர்.மாலதி - உடுப்பிட்டி (8சரி)

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் பண்டங்கள் ஏற்றுமதி கட்டளைக்கு அனுமதி

கொழும்பு, ஜூலை 05

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் பண்டங்கள் ஏற்றுமதி சம்பந்தமான செஸ் வரி திருத்தம் அடங்கிய கட்டளையை நாடாளுமன்றத்துக்கு முன்வைப்பதற்கு வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக இலங்கை நாடாளுமன்ற பணிப் பாளரால் (தொடர்பாடல்) வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் -

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் பண்டங்கள் ஏற்றுமதி சம்பந்தமான செஸ் வரி திருத்தம் அடங்கிய கட்டளையை நாடாளுமன்றத்துக்கு முன்வைப்பதற்கு வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழான இந்த கட்டளை வர்த்தக அமைச்சரால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2021 ஜனவரி 21 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

1972 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் 14(1) பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் வர்த்தக அமைச்சரால் பிரகடனப்படுத்தப்பட்ட 2210/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் ஏற்றுமதியின் போதான செஸ் வரி திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் கூடியபோதே இவ்வாறு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹண திசாநாயக்க, நலின் பிரனாந்து, மர்ஜான் பளீல் ஆகியோர் இந்தக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

இதற்கமைய எதிர்வரும் தினமொன்றில் இந்த கட்டளையை நாடாளுமன்ற அனுமதிக்காக முவைக்கப்படவுள்ளது.

# உலக சந்தையில் விலை குறைந்தவுடன் எரிபொருள்களின் விலை குறைக்கப்படும்

கொவிட் 19 தொற்று நிலைமைக்கு மத்தியில் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை குறைத்து மீண்டும் பொருளாதாரத்தில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமாயின் நாட்டில் வழமையான நிலையை ஏற்படுத்த வேண்டும். இதற்காக நாட்டில் தற்போதுள்ள முடக்க நிலை நீக்கப்பட வேண்டும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக கலந்துரையாடல் ஒன்றின் போது இவ்வாறு தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர், எரிபொருள் விலை அதிகரிப்பால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினையை, மக்களின் உணர்வறிந்த அரசாங்கம் என்ற ரீதியில் நன்கு அறிந்துள்ளதாகவும் கூறினார்.

எதிர்காலத்தில் உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்தவுடன், அதன் நிவாரணத்தை உடனடியாக மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற சுவரோவியங்கள் திருநெல்வேலி பகுதியில்!




சமூகத்தில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் விதமாக சுவரோவியங்களை திருநெல்வேலி பகுதியில், இளைஞர்கள்வரைந்து வருகின்றனர்.

அக்னிஇளையோர் அணியினரால் இந்த சுவரோவியங்கள் வரையப்பட்டு வருகின்றன.

கடந்த வெள்ளிக் கிழமை அவர்கள், தமது இரண்டாவது சுவரோவியத்தையும் வரைந்து முழுமைப்படுத்தியுள்ளனர்.